வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 09.05.2024 வியாழக்கிழமை இதழ் : 130 பக்கங்கள் : 12




# டயானா கமகே எம். பியாக பதவி வகிக்க தகுதியற்றவர்

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு



கொழும்பு, மே 09

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்ப தற்கு சட்ட ரீதியாகத் தகுதி யற்றவர் என்று உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

சமூக செயல்பாட்டாளரான ஓஷல ஹேரத்தின் மேல் முறையீட்டு மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

டயானா கமகே பிரித்தானிய பிரஜையாக இருப்பதால் இந்த நாட்டு பாராளுமன்றில்

அமர்வதற்கு சட்டரீதியாகத் தகுதியற்றவர் எனத் தீர்ப்பளிக்கு மாறு இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு மீதான வழக்கு விசாரணைகள் பெப்ரவரி 13ஆம் திகதி நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து தீர்ப்புக்கான வழக்கு திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பட்டது. இந்த நிலையிலேயே நேற்று புதன்கிழமை உயர்நீதிமன்றம் தனது தீரப்பை அறிவித்தது. (ஐ)

# திருமலை நாகதம்பிரான் ஆலயத்தை நாக விகாரையாக மாற்றினார் பிக்கு!


## திரியாய் மக்கள் கடும் விசனம்

திருமலை, மே. 09

குலதெய்வமாக வழிபட்டுவந்த நாகதம்பிரான் ஆலயத்தை நாக விகாரையாக மாற்றி தமது வழி பாட்டை தடை செய்துள்ளதாக திரியாய் மக்கள் தெரிவிக்கின்ற னர்.

திருகோணமலை - குச்ச வெளி பிரதேச செயலாளர் பிரி வுக்குட்பட்ட திரியாய் வளத் தாமலையடி பகுதியில் உள்ள நாகதம்பிரான் ஆலயமா னது 2021 ஆம் ஆண்டுக் குப் பின்னர் பௌத்த

11



# சிறீ லங்கன் எயார்லைன்ஸால் 45, 790 கோடி ரூபாய் நட்டம்!

## வெளிப்படுத்தினார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, மே 09

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தால் கடந்த பத்து வருடங்களில் (2014 - 2024) 45 ஆயிரத்து 790 கோடி ரூபாய்க்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

அவரின் தகவலின்படி,

2014-2015 ஆம் ஆண்டில் 16 ஆயிரத்து 330

11

பாரிஸ் ஒலிம்பிக்கில்

# தீப்பந்தம் ஏந்தும் வாய்ப்பை பெற்றார் ஈழத்தமிழர் தர்ஷன்



பாரிஸ், மே 9

ஒலிம்பிக் தீப்பந்தத்தின் நீண்ட அஞ்சலோட்ட சுற்றுப்பயணம் நாடு முழுவதும் இடம்பெறவுள்ள நிலையில் பாரிஸ் பிராந்தியத்தில் தீபத்தை ஏந்தும் நல்வாய்ப்பு ஈழத் தமிழர் ஒருவருக்கும் கிடைத்திருக் கிறது.

பாரிஸ் நகரில் கடந்த வருடம் சிறந்த பாண் தயாரிப்பில் முதலிடம் பெற்று நாட்டின்

11

# காலநிலை மாற்றத்துக்காக பொது சட்டம் அறிமுகமாகும்!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



கொழும்பு, மே 09

கடந்த சில நாட்களாக இலங்கை எதிர்நோக்கும் கடும் வெப்பமானது எதிர்கால காலநிலை மாற்றத்தின் அடையாளம். காலநிலை மாற் றத்தை தணிக்கை உடனடி கவனம் செலுத்த வேண்டியது அவசி யம். சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றத்துக்காக ஒரேயொரு பொது சட்டம் கொண்டு வரப்படும்

11

# போதை அடிமையாளரை மீட்க 256 புனர்வாழ்வு நிலையங்கள்!

## பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, மே 09

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மீட்ப தற்கு நாடு முழுவதும் 256 புனர்வாழ்வு நிலையங்கள் நிறுவப்படவுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் விநியோகத்தை ஒழித்து போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான வர்களை மீட்பதற்கு விசேட வேலைத்திட்டம்

11

# டயானாவின் வெற்றிடத்துக்கு முஜிபுர் ரஹ்மான் நியமனம்?

கொழும்பு, மே. 09

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் பாராளு மன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நியமிக்கப் பட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

டயானா கமகே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றம் தெரிவாகியிருந்தார்.

பின்னர் அவர் ஆளும் கட்சிக்கு ஆதரவாளிப்பதாக அறிவித்து அரசில் இணைந்து கொண்டார்.

இரட்டைக் குடியுரிமை கொண்ட காரணத்தி னால் டயனா பாராளுமன்ற உறுப்பினராக பதவி

11

# ஐ. பி. எல். போட்டியில் நேற்று களம்கண்டார் வியாஸ்காந்த்



ஹைதராபாத், மே 09

நடப்பு ஐ. பி. எல். தொடரில் நேற்று நடந்த போட் டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த விஜயகாந்த் வியாஸ் காந்த் விளையாடினார்.

நான்கு ஓவர்கள் பந்து வீசிய 22 வயதான வியாஸ் காந்த் விக்கெட்களை வீழ்த்தாத போதி லும் 27 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்தார்.

11

# கூலிப்படைகளாக செயல்படாதீர்கள்!

## இலங்கை இராணுவத்திடம் சவேந்திர சில்வா கோரிக்கை

கொழும்பு, மே. 09

வெளிநாடுகளில் கூலிப்படையாக இணைப்பதற்கு முன்னெடுக் கப்படும் போலிப் பிரசாரங்களில் இருந்து விலகியிருக்குமாறு இலங்கை இராணுவத்திடம் படை களின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

11

கடன் மறுசீரமைப்பு மூலம்:

# 17 பில்லியன் டொலர் கடன் சுமையை குறைக்க முடியும்!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, மே 09

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையை ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய அரசாங்கம் எதிர் பார்க்கிறது. இதனை வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலம் நாட்டின் கடன் சுமையை 17 பில்லியன் டொல ரால் குறைக்க முடியும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கடன் தவணையைப் பெற்ற பின்னர் நாட்டின்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இப்போது பலரும் தங்களை இடதுசாரிகளாகக் காட்டிக் கொள்ள முண்டியடிக்கின்றனர். அதுவே சமூகத்தில் தங்களை முற்போக்கானவர்களாக அல்லது உயர்ந்தவர்களாக காட்டிக்கொள்ள சந்தர்ப்பம் என்று அவர்கள் நினைக்கின்றனரோ தெரியவில்லை. அதிலும் சிலர் மனித உரிமைவாதிகளாகவும் தங்களைக் காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு இடதுசாரிகள் போலவும் மனித உரிமைவாதிகள் போலவும் தங்களை காட்டிக் கொள்பவர்களில் பலர் தாம் இதற்கு முன்னர் இருந்த இடங்களை சுலபமாக மறந்து விடுகின்றனர். எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் இன்று எந்தக் கூட்டம் என்றாலும் அங்கு தன்னை இடதுசாரியாகக் காட்டிக்கொள்ள முண்டியடிப்பார்.

ஆயுத இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பகாலத்தில் ஒப்பீட்டடிப்படையில் புளொட்டும் ஈ. பி. ஆர். எல். எவ். இரண்டுமே இடதுசாரிய சிந்தனைகளோடு இயங்கியவை. அவை இரண்டும் தென்பகுதியிலும் இடதுசாரிகளோடு உறவை ஏற்படுத்தி அவர்களுக்கு தமிழ் மக்களின் உரிமை போராட்டத்திலுள்ள நியாயங்களை எடுத்துச்சொல்லியவை. ஈ. பி. ஆர். எல். எவ். மலையகத்தில் தனது செயல்பாடுகளை தீவிரமாக செய்ததோடு பல போராளிகள் அங்கிருந்து ஈ. பி. ஆர். எல். எவ்வில் இணைந்து பணியாற்றினார்கள்.

அநேகமாக பலர் தமது மாணவர் பருவத்தில் இடதுசாரிகளாக இருப்பதும் பின்னர் மாறிவிடுவதையும்தான் நாம் கண்டிருக்கின்றோம். ஆனால், மாணவர் பருவத்தில் அல்லது இளமைப் பருவத்தில் இயக்கத்தில் சேர்ந்தவர்கள் இடதுசாரிய சிந்தனை உள்ளவர்களாக இருந்திருந்தால் அவர்கள் உண்மையில், ஈ. பி. ஆர். எல். எவ்விலோ அல்லது புளொட் இயக்கத்தில்தான் சேர்ந்திருப்பார்கள். ஆனால், அவ்வாறு இல்லாமல் புலிகள் இயக்கத்தில் சேர்ந்திருந்தால், அவர்கள் அப்போது இடதுசாரிய சிந்தனை உள்ளவர்களாக இருந்திருக்கமுடியாது. அதற்காக அப்போது அப்படி இல்லாதவர்கள் இப்போது இடதுசாரிகளாக வாழக்கூடாது என்பதல்ல. ஆனால், அப்படியானவர்கள் மற்றையவர்களின் கடந்த காலங்களை விமர்சிக்கவும்கூடாது.

இவைபற்றி எதற்காக இப்போது எழுதவேண்டியிருக்கின்றது என்று நீங்கள் கேட்கலாம். அண்மைக் காலமாக எவரை எடுத்தாலும், ஒவ்வொருவர் பற்றியும் அவர்களின் கடந்த காலங்களை விமர்சிப்பதைக் காணமுடிகின்றது. அவ்வாறு விமர்சிக்கின்ற பலர் தங்களின் கடந்த காலங்களை கண்டுகொள்வதில்லை.

இன்றுவரை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் ராசபுத்திரன் சாணக்கியவை அவர் முன்னர் தனது அரசியல் பிரவேசத்திற்காக பயன்படுத்திய மகிந்த ராஜபக்ஷவின் கட்சியில் இருந்ததைப் பற்றியே பேசுகின்றனர். அவர் தற்போது தமிழ்த் தேசியவாதியாக இருந்து கொண்டு ஏதாவது தவறுசெய்தால், அதாவது தமிழ் தேசியத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டால் அதனைக் கண்டிக்கத்தான் வேண்டும் அதற்காக அவர் பற்றிய எந்த விடயங்களிலும் பழைய கதைகளையே பேசுவது பொருத்தமானது அல்ல.

அரச தரப்புடன் பணியாற்றியவர்களை மாத்திரமன்றி, விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து இயக்கங்களை சேர்ந்தவர்களையும் ஒட்டுக்குழுக்கள் என்றும் துரோகக் குழுக்கள் என்றும் பலரும் வர்ணித்து வருகின்றனர். அதிலும் முக்கியமானவர்கள் நமது முன்னணியினர்தான். அண்மையில், மறைந்த விடுதலை போராளி சோதியாவின் தாயாரின் மறைவு செய்தியைப் பற்றி சமூக வலைத்தளங்களில் பகிர்ந்த பலரும் அவரைப் பற்றி புகழ்ந்துரைத்த அதேவேளையில் அண்மையில், ரெலோ இயக்கத்தால் நினைவு கூரப்பட்ட சிறிசபாரத்தினம் பற்றியும் ஆங்காங்கே தமது வன்மங்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

போராளி சோதியாவின் தாயாரின் மறைவுச் செய்தியை எம்மோடு பகிர்ந்திருந்த கரவெட்டியின் மூத்த ஊடகவியலாளரும் தற்போது நியூசிலாந்தில் வசித்து வருபவருமான ஊடக நண்பர் வரதராசன் கூடவே ஒரு குறிப்பையும் அனுப்பியிருந்தார்.

"சோதியா எனது மச்சாள். அவள் முதலில் சேர்ந்தது ரெலோவில். ரெலோவுக்குள் குழப்பம் தொடங்க தேவாலயத்தில் வைத்து அவளையும் இன்னொரு பிள்ளையையும் (அவளும் எனது இன்னோர் உறவினள்) பாதர் சின்னராசா கண்டு கூட்டிச் சென்று நிர்மலா ஆட்களுடன் இணைத்துவிட்டார். மற்றவள் தான் ஊருக்குப் போவதாக விரும்பி வந்துவிட்டாள். அவர் இப்போது பிரான்ஸில்."

நான் இதைக் குறிப்பிடுவது ஏனென்றால்... இன்று இதை அறியாத பலர் உள்ளனர்.

சோதியாவின் தாயார் என்று தமிழ்த் தேசிய முன்னணிக்காரர் தங்கள் முகநூல்களில் கவிதை பதிவு என இடுகின்றனர். அவர்களுக்கு இது தெரியாது போலும் - குறிப்பாக ஒட்டுக்குழு கதை சொல்பவருக்கே இது தெரியாது.

சோதியாவின் தம்பி ஈ. பி. ஆர். எல். எவ்வில் இணைந்து திரிந்து பிறகு, புலிகள் எங்கோ பிடித்து வைத்திருந்து பின்னர் விட்ட கதையும் உண்டு.

இதுவே, ஊடக நண்பர் அனுப்பியிருந்த குறிப்பு. இதனை எழுதுவதற்காக சோதியாவின் தியாகங்களை குறைத்து மதிப்படுவதென்பதல்ல. அவர் ரெலோவில் இணைந்ததும் அவருக்கு தமிழ் இனத்தின் மீதிருந்த அக்கறையும் இன மானமும்தான்.

ஒருவர் மீது கற்களை வீசுவதற்கு முன்னர் ஒன்றுக்கு பல தடவை நாம் செய்வது சரிதானா என்பதை யோசிக்க வேண்டாமா...!

- ஊர்க்குருவி.

# அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிவித்தல்!

கொழும்பு, மே 09

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கடவுச்சீட்டுகளை மீளப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஆவணங்களை ஏற்றுக் கொள்ளும் நேரங்களில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தனது எக்ஸ் தளத்தில் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதியிலிருந்து இந்த நேர அட்டவணை நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இதன்படி, குடியேற்ற வீசாவுக்கு விண்ணப்பித்தோர் தமது கடவுச்சீட்டுகளை செவ்வாய் கிழமைகளில் பிற்பகல் 03 மணிக்கு மாத்திரமே திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

கொன்சியுலர் பிரிவுக்கான ஆவணங்கள் அனைத்தும் புதன்கிழமைகளில் பிற்பகல் 03 மணிக்கு மாத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

குடியேற்ற வீசா அல்லாத ஏனைய வீசாக்களுக்கு விண்ணப்பித்தோர் தமது கடவுச்சீட்டுகளை வியாழக் கிழமைகளில் பிற்பகல் 03 மணிக்கு மாத்திரமே திரும்பப் பெற முடியும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# "அஜித் நிவாட் கப்ராலுக்கான பயணத் தடையை நீக்கமுடியாது"

கொழும்பு, மே 09

குற்றப் புலனாய்வு திணைக்களம் உரிய முறையில் விசாரணைகளை நடத்தினால் அஜித் நிவாட் கப்ரால் எந்த நேரத்திலும் சந்தேகநபராக மாறலாம். எனவே, அவருக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத் தடையை நிரந்தரமாக நீக்க முடியாது என்று கோட்டை நீதிவான் கோசல சேனாதீர தெரிவித்தார்.

அஜித் நிவாட் கப்ராலின் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல வேண்டியிருப்பதால் அவருக்கு விதிக்கப்பட்டுள்ள பயணத் தடையை நிரந்தரமாக நீக்குமாறு கோரி சட்டத்தரணி திலின வீரசிங்க பிரேரணை மூலம் விடுத்த கோரிக்கையை நிராகரித்தபோதே நீதிவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நியாயமான காரணத்தை முன்வைத்தால் அஜித் நிவாட் கப்ராலின் பயணத் தடையை குறுகிய காலத்தில் நீக்க முடியும் என்றும் நீதிவான் கூறினார்.

2014ஆம் ஆண்டு தினியாவல பாலித தேரர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் மத்திய வங்கியின் நிதிச் சபை உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அஜித் நிவாட் கப்ரால் நிதிச் சபையின் அனுமதியுடன் மட்டும் மூன்றாம் தரப்பினருக்கு 6.5 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை செலுத்தினார் என்று அந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டது. (ஐ)

# டயானா கமகே உருவாக்கிய ஐ. ம. ச. சட்டபூர்வமானதா?

## எதிர்க்கட்சிக்கு அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை

கொழும்பு, மே 09

இலங்கை பிரஜையல்லாத டயானா கமகே வினால் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி சட்டபூர்வமானதா? பொதுத் தேர்த லின் போது கட்சியின் வேட்பு மனுவில் அவர் கையெழுத்திட்டிருந்தாலோ, தற்போ தைய கட்சி செயலாளருடன் அவர் உடன் படிக்கையைச் செய்திருந்தாலோ அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். ஆகவே சிறந்த சட்டத்தரணிகளை எதிரணியினர் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இராஜதந்திர சிறப்புரிமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தப் போவதில்லை. ஆனால் தற்போது புதிய பிரச்னையொன்று எழுந்துள்ளது.

டயானா கமகே இலங்கை குடியுரிமையற்றவர் என்பதால் அவரின் பாராளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது. இங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமைக்கு அவரே கைச்சாத்திட்டுள்ளார். ஆகவே ஐக்கிய மக்கள் சக்தி சட்டபூர்வமானதா? என்ற பிரச்னைகள் எழும். டயானாவே கட்சியை இவர்களிடம் கொடுத்துள்ளார். அவர் அந்தக் கட்சியைப் பதிவு செய்யும் போது அவர் இலங்கைப் பிரஜையாக இல்லாமலே இருந்துள்ளார். இந்த நாட்டை சேர்ந்தவர் அல்லாத ஒருவருக்கு கட்சியைப் பதிவு செய்ய முடியாது.

அத்துடன் 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுவிலும் அவரா கையெழுத்திட்டார் என்பதும் தெரியாது?. அப்படி அவர் கையெழுத்திட்டிருந்தால் அது தொடர்பாகக் கவனம் செலுத்தலாம். எதிரணியின் உறுப்பினர்கள் பலர் பாராளுமன்ற உணவகத்தில் கதைக்கும் போது மிகவும் குழப்பத்தில் இருப்பது போன்றே இருந்தது- என்றார்.

இதன்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கட்சி பதவிகள் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அதில் எந்த பிரச்னைகளும் கிடையாது என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் உரையாற்றிய அமைச்சர் காஞ்சன விஜேசேகர, அப்படியில்லை, இப்படி இல்லை என்று கூறினாலும் இது நீதிமன்றம் செல்லும் பிரச்னையாகும். நீதிமன்றத்தில் அது தொடர்பில் கூற வேண்டிவரும்.

வேட்பு மனுக்களில் யார் கையெழுத்திட்டது என்பதை பரிசோதிக்க வேண்டிவரும். இதனால் விவாதங்களுக்கு நேரத்தைச் செலவிடுவதை விடுத்து, இந்த விடயத்துக்கு முகங்கொடுப்பதற்கு தயாராகுங்கள். உங்களுக்கு இந்த விடயத்தில் ஏதோவொரு பிரச்னை உள்ளது. அவ்வாறு நடக்கக்கூடாது என்றே பிரார்த்திக்கின்றேன்.

எவ்வாறாயினும் இலங்கைப் பிரஜை அல்லாத ஒருவர் கட்சியை உருவாக்கியிருந்தால், அவர் அந்தக் கட்சியை உங்களிடம் கொடுத்திருந்தால், வேட்பு மனுவில் கையெழுத்திட்டிருந்தால், அவருக்கும் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் இடையே ஏதாவது உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டிருந்தால் பிரச்னை இருக்கும். இப்போதே சிறந்த சட்டத்தரணி குழுவினரைத் தயாராக வைத்துக்கொள்ளுங்கள். எங்கள் பக்கத்திலிருந்து வந்தவர்களை சட்டத்தரணிகளாக வைத்திருக்க வேண்டாம். அவர்களிடம் சட்ட ஆலோசனைகளைப் பெற்றால் பிரச்னைகள் தீவிரமடையும்.- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.05.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 26
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நீதி பொறிமுறை கதைகள்

உள்ளகப் பொறிமுறையின் மூலம் எமக்கு (தமிழ் மக்களுக்கு) நீதி கிடைக்காது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார். உள்ளக பொறிமுறை கதை ஒரு பழங்கதை இதேபோன்று, சர்வதேச பொறிமுறை கதையும் பழசாகிவிட்டது.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில், 2015 - 2018 வரையான காலப்பகுதியில் மட்டும்தான் ஓரளவாவது சில விடயங்களை முன்னெடுக்கப் போவதான கதைகள் கூறப்பட்டன. இவ்வாறான கதைகளை அரசாங்கம் கூறியபோது, அந்த அரசாங்கத்துடன் சுமந்திரனும் நெருங்கிச் செயல்பட்டிருந்தார். இந்தக் காலத்தில் இரா. சம்பந்தனும் சுமந்திரனும் அவர்களின் ஆலோசனையை ஏற்றுக்கொண்ட கூட்டமைப்பின் பங்காளிகளும் உள்ளக பொறிமுறை மீதான நம்பிக்கையுடன்தான் இருந்தனர். குறிப்பாக, புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவர முடியுமென்றும் அதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் முழுமையாகத் தீர்க்கப்படும் எனவும் கதைகள் பல சொல்லப்பட்டன.

ஆனால், எதுவும் நடைபெறவில்லை. உண்மையில், உள்ளக பொறிமுறையும் வெற்றியளிக்கவில்லை - அதே வேளை, சர்வதேச அழுத்தங்கள் என்பதும் வெற்றியளிக்கவில்லை. அனைத்துமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆகக்குறைந்த நம்பிக்கையைக்கூட வழங்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளது. தமிழ் மக்களின் வாக்குகளை கேட்டு பலரும் படையெடுக்கவுள்ளனர். அவ்வாறானவர்களுக்கு எந்த அடிப்படையில் தமிழ் மக்கள் வாக்களிக்க முடியும்? அவர்களுக்கு வாக்களிக்குமாறு தமிழ் கட்சிகள் எந்த அடிப்படையில் தமிழ் மக்களை கோர முடியும்? இவ்வாறான கேள்விகளுடன் தமிழ் அரசியல் உரையாடல்கள் நீண்டு செல்கின்றன.

சர்வதேச சமூகம் தொடர்பில் போலியான நம்பிக்கைகளே பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஊட்டப்பட்டன. இப்போதும் அது தொடர்கின்றது. உண்மையில், சர்வதேச சமூகம் என்பது ஒன்றில்லை - அது பல வகைப்பட்டது. ஆனால், இந்த உண்மையை எந்தவோர் அரசியல்வாதியும் சரி, சிவில் சமூக அமைப்புகளும் சரி பாதிக்கப்பட்ட மக்களுக்கு புரியும்படி கூறுவதில்லை. மாறாக, யதார்த்தத்துக்கு மாறான உண்மைக்கு புறம்பான கதைகளையே கூற முற்படுகின்றனர். இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களை கனவுலகில் வாழுமாறு நிர்ப்பந்திக்கின்றனர்.

அடிப்படையில் சர்வதேச சமூகம் என்பது பலம் பொருந்திய நாடுகளையே குறிக்கும். உலக அரசியல் அவர்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அவர்களால் மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் என்பவை அவர்களின் நலன்களுக்கு உட்பட்டவை. அவர்களின் நலன்களிலிருந்து அழுத்தங்களை பிரித்துப் பார்க்கும்போதே தவறுகள் இடம்பெறுகின்றன. கடந்த பதினைந்து வருடகாலமாக ஏன் சர்வதேச அழுத்தங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக இருக்கவில்லை என்றால் பதில் சுலபமானது. அதாவது, இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களை விரோதித்துக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. அவ்வாறு விரோதித்துக் கொள்ளும்போது, அது தங்களின் நலன்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதை கணித்தே ஒவ்வொரு கருத்துகளையும் வெளியிடுகின்றனர். அவர்களுக்கு தேவையானவர்கள் ஆட்சிக்கு வருவதையே அவர்கள் விரும்புகின்றனர். அவ்வாறானவர்களோடு பேசுவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் நன்மையடைய வேண்டும் என்பதே அவர்களின் ஆலோசனையாக இருக்கின்றது.

# டயானாவுக்கு செலவு செய்யப்பட்ட நிதிக்கு பதில் கூறவேண்டியது யார்?

## இராதாகிருஷ்ணன் எம். பி. கேள்வி



நுவரெலியா, மே 09

டயானா கமகேவுக்கு கொடுக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் மூலமாக சட்டம் தன் கடமையை செய்துள்ளதுடன் ஏனையவர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்துள்ளது.

இதுவரை காலமும் அவருக்கான செலவு செய்யப்பட்ட நிதிக்கு யார் பதில் கூறுவார்கள் அல்லது பொறுப்பேற்பார்கள் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் தெரிவித்தவை வருமாறு,

இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க முடியாது என்பதை நீதிமன்றம் மிகவும் தெளிவாக இந்த தீர்ப்பின் மூலமாக தெரிவித்துள்ளது. காலம் கடந்தாலும் சரியான நேரத்தில் இந்த தீர்ப்பு கிடைத்துள்ளது. இந்த தீர்ப்பானது ஐக்கிய மக்கள் சக்தி கிடைத்த ஒரு வெற்றியாகவும் கருத முடியும். ஏனெனில், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான முன்னாள் அமைச்சர் டயானா கமகே அந்த கட்சியின் கொள்கைக்கு எதிராக அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்ததுடன் அமைச்சு பதவியையும் ஏற்றுக் கொண்டார்.

இந்தத் தீர்ப்பின் மூலமாக ஐக்கிய மக்கள் சக்தி இழந்த ஒரு பாராளுமன்ற ஆசனத்தை மீண்டும் பெற்றுக் கொண்டுள்ளது. குறிப்பாக இதுவரை காலமும் இந்த வழக்கு என்ன நடக்கும் என பார்த்துக் கொண்டிருந்த பலருக்கு இந்த தீர்ப்பானது நீதிமன்றத்தின் நடுநிலைமை யையும் அதன் தனித்துவத்தை நிரூபித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் டயானா கமகேவுக்கு அரசாங்கம் செலவு செய்த நிதியானது எங்களுடைய மக்களின் வரிப் பணமாகும். செலவு செய்யப்பட்ட அந்தப் பணத்துக்கு பதில் கூறுபவர்கள் யார்? எங்களுடைய நாடு பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்துள்ள இந்த காலப் பகுதியில் அன்றாடம் தங்களுடைய குடும்பங்களுக்கு உணவை பெற்றுக்கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இவ்வாறான பணம் வீணடிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ஐ)

# தங்கனின் தாயார் காலமானார்



வவுனியா, மே 09

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணை பொறுப்பாளர் சோ. தங்கனின் (சுதா) தாயார் சோமசுந்தரம் பரமேஸ்வரி நேற்று முன்தினம் காலமானார்.

வவுனியா - தோணிக்கல்லில் உள்ள அவரின் வீட்டில் வைக்கப்பட்டுள்ள பூதவுடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. (ஐ)

# மருத்துவர் கேதீஸ்வரனுக்கு யாழ். நீரிழிவு கழகம் கௌரவம்!



யாழ்ப்பாணம், மே 09

மணிவிழா கண்ட யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரனை யாழ். நீரிழிவு கழகத்தினர் நேற்று பாராட்டி கௌரவித்தனர்.

இந்த கௌரவிப்பு நிகழ்வு நேற்று புதன்கிழமை மருத்துவர் ஆ. கேதீஸ்வரனின் பணிமனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். நீரிழிவு கழக போசகரும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதியுமான பேராசிரியர் இ. சுரேந்திரகுமாரனால் கேதீஸ்வரன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

தொடர்ந்து, யாழ். நீரிழிவு சிகிச்சை நிலைய சிறப்பு மருத்துவ நிபுணர் ம. அரவிந்தன், மருத்துவர் பரமேஸ்வரன், நீரிழிவு கழகத்தின் தலைவர் தி. மைக்கல் மற்றும் நீரிழிவு கழக அங்கத்தவர்கள் மாலை அணிவித்து மரியாதை வழங்கினர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 09 வியாழக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 26
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவிதியை




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**கடகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர் கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**துலாம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களுக்கு உதவுவார்கள். அமோகமான நாள்.

**தனுசு**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை எல்லாம் மன்தில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கும்பம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

# தி. மு. க., அ. தி. மு. க. ஆட்சியில் பொருளாதார ஏற்றத்தாழ்வு உச்சம்

## அன்புமணி குற்றச்சாட்டு

சென்னை, மே 09

தி. மு. க., அ. தி. மு. க. வின் 57 ஆண்டு கால ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு மிகப்பெரிய அளவில் அதிகரித்திருப்பதாக பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அனைவருக்கும் முன்னேற்றம் என்ற மயக்கும் முழக்கத்துடன் ஆட்சிக்கு வந்த தி. மு. க. அ. தி. மு. க. வின் ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு மிகப்பெரிய அளவில் அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.



தனிநபர் வருமானத்தில் மாநில சராசரிக்கும் குறைவாக உள்ள 24 மாவட்டங்களில் 16 மாவட்டங்கள் வடக்கு மற்றும் காவிரி பாசன மாவட்டங்களைச் சேர்ந்தவை என்பதிலிருந்தே சமச்சீரான வளர்ச்சியை ஏற்படுத்துவதில் அரசு தோல்வியடைந்திருப்பது உறுதியாகியுள்ளது- என்றார். (எ)

# "செல்வப்பெருந்தகைக்கு இப்போதுதான் காமராஜர் நினைவிடம் ஞாபகம் வந்ததா?"

சென்னை, மே 09

"தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகைக்கு இப்போதுதான் காமராஜர் நினைவிடம் ஞாபகம் வந்ததா?" என பா. ஜ. க. மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களவை தேர்தல் பிரசாரத்தின்போது இந்த கேள்வியை கேட்டு இருக்கலாமே? காங்கிரஸ் தேசிய தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி எத்தனை முறை பெருந்தலைவர் காமராஜர் நினைவிடத்துக்கு



வந்து சென்றுள்ளார்கள்? பெருந்தலைவர் காமராஜருக்கு எதிராக கல்லூரி மாணவரை நிறுத்தி அவரை தோற்கடித்த தி. மு. க. 1967 இல் காங்கிரஸ் ஆட்சிக்கு முடிவுரை எழுதிய தி. மு. க. வினரோடு அறிவாலய வாசலில் காத்திருந்து சில இடங்களைப் பெற்ற உங்களுக்கு பெருந்தலைவர் காமராஜரின் நினைவிட ஞாபகம் இப்போதுதான் வந்ததா?

வாக்குப்பதிவு முடிந்த பிறகு காமராஜரின் ஞாபகம் வந்தது போல் தி. மு. க. ஆட்சியை கண்டிப்பது போல் நாடகமாடுவது மக்களை ஏமாற்றும் செயல்தானே? காமராஜர் தனது இறுதி நாட்களில் இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பு நிலையில் தான் இருந்து இறந்தார் என்பது தான் வரலாறு. - என்றார் தமிழிசை. (எ)

# வெளிப்படைத்தன்மையுடன் தேர்தலை நடத்த வேண்டும்



## ஆணைக்குழுவுக்கு திருமாவளவன் கடிதம்

சென்னை, மே 09

வாக்குப்பதிவு விவரங்களை வெளியிடுவதில் ஏற்படும் முரண்களை களைந்து, மீதமுள்ள தேர்தல்களை வெளிப்படைத்தன்மையுடன் நடத்த வேண்டும் என இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய தேர்தல் ஆணைக் குழு 2024 மக்களவை தேர்தலுக்கான முதல் இரண்டு கட்ட தேர்தல்களில் இறுதி வாக்காளர் எண்ணிக்கை தரவுகளை கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதிதான் வெளியிட்டது.

இதன்படி மக்களவை தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவு முடிந்து 10 நாட்களுக்கு பிறகும், 2 ஆம் கட்ட வாக்குப்பதிவு முடிந்து 4 நாட்களுக்கு பிறகும் வாக்குப்பதிவு விவரங்களை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கையை சிலமணி நேரங்களில் முடிக்கும் தேர்தல் ஆணைக்குழு வாக்குப் பதிவு விவரங்களை வெளியிடுவதில் இவ்வளவு தாமதம் செய்தது ஏன்? முந்தைய சந்தர்ப்பங்களில் வாக்குப் பதிவு முடிந்த 24 மணிநேரத்துக்குள் வாக்குப் பதிவு விவரங்களை ஆணைக் குழு வெளியிட்டது.

ஆனால் இப்போது ஏன் இந்தமாற்றம், மேலும் தாமதத்தை நியாயப்படுத்துவதற்கான எந்த விளக்கத்தையும் தேர்தல் ஆணைக்குழு வழங்கவும் இல்லை. எனவே, தேர்தல்களை வெளிப் படைத்தன்மையுடன் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# கஞ்சா கடத்தல் தொடர்பில் பதிவான வழக்கு எத்தனை?

## தமிழக அரசிடம் நீதிமன்றம் கேள்வி

மதுரை, மே 09

கஞ்சா விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன? எத்தனை வழக்குகளில் நீதிமன்றங்களில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது? எத்தனை வழக்குகளில் நீதிமன்றத்தில் பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா சமர்ப்பிக்கப்பட்டுள்ளது? என சரமாரியாக கேள்வி எழுப்பிய உயர் நீதிமன்றம், இதுதொடர்பில் தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில ஆக்கிரமிப்பைக் கண்டித்து முல்லைத்தீவு மக்கள் போராட்டம்!

## ஆளுநர் செயலகம் முன்பாக நடத்தினர்

யாழ்ப்பாணம், மே 09

**மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்தக்கோரி முல்லைத்தீவின் கொக்குதொடுவாய், கொக்கிளாய் கருநாட்டுக்கேணி பிரதேச மக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நேற்று போராட்டம் நடத்தினர்.**

இந்தப் போராட்டத்தில் மகாவலி எனும் பெயரில் தமிழர்களின் பூர்வீக காணிகளை அபகரிக்காது மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து, எமது வாழ்வாதாரத்தை பறிக்காதே, மகாவலி அபிவிருத்தி முல்லைதீவில் பௌத்த மயமாக்கலுக்கா, எமக்கு நீதி வேண்டும், மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.



போராட்டத்தின் நிறைவில் தொடர்ந்து மகாவலி நில ஆக்கிரமிப்பு தொடர்பாக ஆளுநரின் செயலாளரிடம் மனு கையளிக்கப்பட்டது. (ஐ)

# விசேட சுற்றிவளைப்பில் 676 பேர் கைதாகினர்!

கொழும்பு, மே 09

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் போதைப்பொருட்களுடன் 10 பெண்கள் உட்பட 676 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 19 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 14 பேரை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 378 கிராம் ஹெரோயின், 204 கிராம் ஐஸ், 258 கிராம் கஞ்சா, 21 கிராம் ஹெரோயின் மற்றும் 191 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெள்ளரிக்காய் விற்பனை உயர்வு

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணத்தில் வெள்ளரிக்காய் விற்பனை சூடுபிடித்துள்ளது.

அதிக வெப்பம் காரணமாக மக்கள் வெள்ளரிக்காயை மக்கள் அதிகளவில் வெள்ளரிக்காயை கொள்வனவு செய்து செல்கின்றனர்.

வெள்ளரிக்காய் ஒன்றின் விலை 300 ரூபாய் முதல் 450 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. (ஐ)

# தவறவிட்ட பெருந்தொகை பணத்தை உரியவரிடம் கையளித்த நடத்துநர்!

## பலரும் பாராட்டுகள்

வடமராட்சி, மே 08

வெளிநாட்டவர் ஒருவர் பெருந்தொகை பணத்துடன் தவறவிட்ட பணப் பையை கண்டெடுத்து கையளித்த பருத்தித்துறை பேருந்து நடத்துநரை பலரும் பாராட்டியுள்ளனர்.

வட பிராந்திய போக்குவரத்து சபை - பருத்தித்துறை சாலையில் நடத்துநராக கடமையாற்றும் பா. பாலமயூரன் என்பவரே இவ்வாறு பாராட்டப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு புறப்பட்ட பேருந்தில் வெளிநாட்டவர் இருவர் அநுராதபுரத்துக்கு பயணித்தனர்.

அநுராதபுரத்தில் அவர்கள் இறங்கிய பின்னர், கடவுச்சீட்டுகள், ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 840 ரூபாய், 300 யூரோ என்பவை கொண்ட பணப்பையை அவர்கள் தவறவிட்டுச் சென்றனர்.

இதனை கண்டெடுத்த நடத்துநர் அதிகாரிகள் மூலமாக அந்தப் பணத்தை உரியவரிடம் ஒப்படைத்தார்.

அவரின் இந்த நேர்மையான செயலுக்கு பலரும் பாராட்டை தெரிவித்தனர். (ஐ- 02)

# ஈரானுக்கான விமான சேவையில் மஹான்!

கொழும்பு, மே 09

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவையை ஆரம்பிப்பதற்கு ஈரானின் மஹான் எயார்லைன்ஸ் நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

இந்த விமான சேவையை ஆரம்பிப்பதற்கான தயார்படுத்தல்களை ஈரான் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் ஏற்றுக்கொள்ள முடியாதது!

## மன்னார் பிரஜைகள் குழு

மன்னார், மே 09

மன்னார் தீவில் அதானி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள 52 காற்றாலை உயர் மின் திட்டத்திற்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் அவரின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "மன்னார் தீவில் மீண்டும் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த திட்டத்தினால் எமக்கு வர உள்ள அழிவுகள் குறித்து நாங்கள் பல வருடங்களாகக் கூறி வருகிறோம். குறித்த திட்டத்தால் எமது வாழ்விடம் திட்டமிட்டுப் பறிக்கப்படவுள்ளது.

எமது பண்பாடு மற்றும் வரலாற்றுச் சுவடுகள் அழிக்கப்படப் போகின்றது. மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு மக்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்படப் போகிறது. மாணவர்களின் கல்வி மற்றும் அவர்களின் எதிர்கால நல வாழ்வும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

எமது வளமான மண் அழிக்கப்பட்டு, எதுவும் அற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்படும். எனவே, எமது மக்களை ஒன்றுதிரட்டி பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவரது முடிவை நாங்கள் எதிர் பார்க்க உள்ளோம். மன்னார் தீவில் உள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி நல்லதொரு தீர்வை வழங்குவாராக இருந்தால் எதிர்ப்புப் போராட்டங்கள் கைவிடப்படும்.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விட்டால் எமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். மன்னார் தீவிலிருந்து ஒரு துண்டு நிலத்தைக்கூட நாங்கள் இத் திட்டங்களுக்கு வழங்க மாட்டோம்.




மேலும் கனிய மணல் அகழ்வால் எமது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு போதிய விளக்கம் இன்மையினால் மக்களிடம் இருந்து திட்டமிட்ட வகையில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

சுமார் 500 ஏக்கர் வரையிலான காணிகள் காணி உரிமையாளர்களிடம் கனிய மணல் அகழ்வுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே, குறித்த திட்டங்களையும் நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கின்றோம் - என்றார். (ஐ)

# விவசாயத் துறை அபிவிருத்தியின்றி கிராமிய பொருளாதாரம் பலமடையாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, மே 09

விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யாமல் கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் உட்பட கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஆரம்பிக்கும் அனைத்து வேலைத் திட்டங்களையும் வெற்றியடையச் செய்வதற்கு கிராமிய ரீதியாக செயல்படும் அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பு அவசியமானது என்றும் அவர் கூறினார்.

2100 புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை நேற்று வழங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, அஸ்வெசும, உறுமய போன்ற வேலைத் திட்டங்கள் குறித்து புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி, குறைந்த வருமானம் பெறும் மக்களை மேம்படுத்த அரசாங்கம் இந்த திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும், தமது பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக இந்த வேலைத் திட்டங்களில் இணைந்து தீவிரமாக செயல்படுமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், இன்று வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். நாங்கள் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் ஓர் உடன்பாட்டை எட்டியுள்ளதோடு அதிலுள்ள பல நிபந்தனைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய அபிவிருத்தித் திட்டம் கிராமத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் வெற்றிகரமான அறுவடையைப் பெற முடிந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டின் பெரும் போகத்தில், மீண்டும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றோம். இந்த பங்களிப்பின் காரணமாக இன்று நாம் பொருளாதார ரீதியில் வலுவடைந்துள்ளோம். இதன் மூலம் இன்று 2100 கிராம உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற் கொள்ள முடிந்தது. நிர்வாகப் பணிகள் மட்டுமின்றி, கிராமப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் பொறுப்பும் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 இலட்சம் நுகர்வோரின் மின் இணைப்பு துண்டிப்பு

## மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே

**உரிய நேரத்தில் மின் கட்டணம் செலுத்தாததால் கடந்த இரு வருடங்களில் 13 இலட்சம் நுகர்வோரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன - என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.**



சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் கெவிந்து குமாரதுங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "2022ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மின்சார கட்டணம் தாமதமாக செலுத்தியதால் சுமார் 3 கோடி சிவப்பு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. உரிய நேரத்தில் மின் கட்டணம் செலுத்தாத காரணத்தால் 13 இலட்சம் நுகர்வோரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அத்துடன், ஒரு இலட்சத்து 26 ஆயிரத்துக்கும் அதிகமான நுகர்வோரின் கணக்குகள் மூடக்கப்பட்டுள்ளன. 19 இலட்சம் புதிய மின் இணைப்புகள் பெறப்பட்டுள்ளன. நாட்டில், தற்போது 7.2 மில்லியனுக்கும் அதிகமான மின்சார பாவனையாளர்கள் உள்ளனர்." - என்றார். (ஐ)

# பதுளை சுற்றிவளைப்பில் 15 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மே 09

பதுளையில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 15 சந்தேக நபர்கள் 48 மணிநேரத்தில் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, 1.2 கிராம் ஐஸ், 155 மில்லிகிராம் ஹெரோயின், 9.2 கிராம் கஞ்சா, 5.7 லீற்றர் கசிப்பு, 1.4 கிலோ மாவா , 3.7 லீற்றர் சுக்கு, 33 லீற்றர் கோடா ஆகியவையும் இதன்போது கைப்பற்றப்பட்டன.

கடந்த, 6, 7ஆம் திகதிகளில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை நடைபெற்றது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# கல்கிசை சுற்றிவளைப்பில் 3 பெண்கள் கைதாகினர்!

கொழும்பு, மே 09

கொழும்பு - கல்கிசை பொலிஸ் பிரிவில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதி நடத்தினர் என்று கூறப்படும் பெண்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிபன்னை, பொலன்னறுவை மற்றும் தெனியாய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30, 35, 44 வயதுடைய மூன்று பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருளுடன் சிப்பாய் கைதானார்!

கொழும்பு, மே 08

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் மகியங்கனை பெரகும்புர மாவத்தையில் வைத்து முன்னாள் இராணுவ சிப்பாயை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக மகியங்கனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய சந்தேக நபரை சோதனைக்கு உட்படுத்திய போது சந்தேக நபரிடம் இருந்து 3.1 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 625 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# எந்த விமான நிறுவனமும் இலாபம் ஈட்டவில்லை!

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

கொழும்பு, மே 09

உலகில் எந்த ஒரு விமான நிறுவனமும் இலாபம் ஈட்டவில்லை, இது அனைத்து விமான நிறுவனங்களுக்கும் இயல்பான ஒரு சூழ்நிலை என்று சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.



எயார் இந்தியா, பி. ஓ. ஏ. சி., சுவிஸ் எயார்லைன்ஸ் போன்ற பணக்கார நாடுகளில் உள்ள விமான நிறுவனங்கள் இலாபம் ஈட்டவில்லை. சில விற்றுத் தீர்ந்துவிட்டன என்றும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், நஷ்டம் காரணமாக எயார் இந்தியா டாட்டா நிறுவனத்திற்கு விற்றுத் தீர்ந்துவிட்டது. எமிரேட்ஸ் நிறுவனத்துக்கு ஒவ்வோர் ஆண்டும் 2 முதல் 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அரசு வழங்கியது.

இலங்கை போன்ற சிறிய நாடு அந்த வகையில் விமான சேவையை பராமரிக்கும் நிலையில் இல்லை . விமானம் வாங்குவதற்கு எங்களிடம் நிதி இல்லை. பெரிய மூலதனத்தை முதலீடு செய்ய முடியாது. குத்தகைக்கு விமானங்களை எடுக்கிறோம். 6,000 ஊழியர்களின் வேலை பாதுகாப்பை உறுதிசெய்ய விமான சேவையை தொடர பெரிய மூலதனத்தை கொண்டு வரக்கூடிய குழுவுடன் நாங்கள் சேர வேண்டும்" என அவர் கூறினார்.

2023 ஆம் ஆண்டில் 791 பணியாளர்கள் சிறீ லங்கன் எயார்லைன்ஸிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இது கடந்த 10 ஆண்டுகளில் மிகப்பெரிய ஆட்சேர்ப்பு ஆகும்,. இதே நேரத்தில் அது 2023 இறுதிக்குள் ரூ.609 பில்லியன் இழப்பை ஏற்படுத்தியது.

கடந்த வருடம் சுமார் 474 பணியாளர்கள் இராஜினாமா செய்தமையால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர் - என்றும் கூறினார். (ஐ)

# பாதசாரி கடவையில் கடந்த மாணவனை பந்தாடியது ஓட்டோ!

கொழும்பு, மே 09

பாதசாரி கடவையில் வீதியை கடந்த மாணவனை அதிவேகமாக வந்த முச்சக்கரவண்டி மோதித் தள்ளயதில் அவர் படுகாயமடைந்தார்.

கொட்டகலையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் தனியார் கல்வி நிலையத்துக்கு சென்று கொண்டிருந்த 15 வயது மாணவனே படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த மாணவன் கொட்டகலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாஸ்மதி அரிசிக்கு மாற்றாக இரு அரிசி வகை கண்டறிவு!

கொழும்பு, மே 09

பாஸ்மதி அரிசிக்கு மாற்றீடாக 2 மாற்று நெல் வகைகளை குருநாகல் - பத்தலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் கண்டறிந்துள்ளது.

ஏ.ரி 306 மற்றும் ஏ.ரி 309 ஆகிய இந்த நெல் வகைகள் பாஸ்மதி அரிசியைப் போன்று நீளமானவை என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது சுற்றுலா மற்றும் விருந்தகங்களின் பயன்பாட்டிற்காக மாத்திரம் இந்தியா, பாகிஸ்தானில் இருந்து பாஸ்மதி அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கையில் இனங்காணப்பட்ட இந்த 2 மாற்று நெல் இனங்களுக்கு பயிர் விநியோகக் குழுவின் பரிந்துரை வழங்கப்படவுள்ளது.

இந்தப் பரிந்துரையை அடுத்து எதிர்வரும் மாதங்களில் அவற்றை நாடு முழுவதும் பயிரிடுவதற்காக விநியோகிக்கப்படும் என்று பத்தலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. (ஐ)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு:

# ஹிருணிகாவுக்கு எதிராக ஜூன் 14 இல் விசாரணை

கொழும்பு, மே 09

நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதி அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளை இரண்டு வாரங்களுக்குள் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஹிருணிகா பிரேம சந்திரவின் சட்டத்தரணிகளுக்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

ஊவா மாகாண ஆளுநர் மொஹமட் முஸம்மிலின் மகன் தாக்கல் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

# மன்னா ரமேஷின் வீட்டில் கைக்குண்டு மீட்கப்பட்டது

கொழும்பு, மே 09

கைது செய்யப்பட்ட மன்னா ரமேஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டன என்று கொழும்புக் குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவிசாவளை யலகம பகுதியில் அமைந்துள்ள அவரின் வீட்டில் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. குற்றப்பிரிவு அதிகாரிகளால் மீட்கப்பட்ட கைக்குண்டு அவரின் வீட்டில் புதைத்து வைக்கப் பட்டிருந்ததாகவும் மோட்டார் சைக்கிள் வீட்டின் பின்புறம் மறைத்து வைக்கப் பட்டிருந்தாகவும்தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டண குறைப்பு முன்மொழிவு நாளை சமர்ப்பிக்குமாறு உத்தரவு!

கொழும்பு, மே 09

**மின்சார கட்டண குறைப்பு தொடர்பான முன்மொழிவுகளை நாளை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.**

இந்த முன்மொழிவு கடந்த முதலாம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். மின்சார சபை கால அவகாசத்தை கோரியிருந்தது. இதற்கமைய நாளை 10ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த முன்மொழிவுகள் கிடைத்ததன் பின்னர் மின் கட்டணங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். மின்சாரக் கட்டணங்களை குறைப்பது தொடர்பான விபரங்களை எதிர்வரும் ஜூலை மாதத்தில் அறிவிக்க முடியும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்தது. (ஐ)

## ரஷ்யா, உக்ரைன் கூலிப் படைக்காக கடத்தப்படும் முன்னாள் படையினர்!

கொழும்பு, மே 09

முப்படைகளிலும் பணியாற்றி ஓய்வுபெற்ற இராணுவத்தினரை ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளுக்கு சுற்றுலா வீசா மூலம் அழைத்து சென்று கூலிப்படைகளில் அமர்த்தும் மனித கடத்தல் செயல்பாடு நடைபெறுவதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அவர்களில் சிலர் யுத்தத்தில் பலத்த காயமடைந்து ஆதரவற்ற நிலையில் பரிதாபமாக உயிரிழப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த மனித கடத்தல் செயல்பாடு தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 011 719 2142 அல்லது 011 719 2250 என்ற கடற்படை தலைமையக தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் வழங்குமாறு கடற்படை கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

## வங்கியில் போலி நகைகளை அடகு வைத்தவர்கள் கைது!

கொழும்பு, மே 08

போலி நகைகளை அரச வங்கி ஒன்றில் அடகு வைத்து பணம் பெற்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வங்கி வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் அம்பாந்தோட்டை - தனமல்வில பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இரண்டு நபர்களும் போலி மோதிரங்களை அடகு வைத்து 17 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் பல முறை பத்து போலி மோதிரங்களை வங்கியில் அடகு வைத்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஐ)

# பெண்கள் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் செயல்திட்டம்!

### ஐ. நா., ஜப்பான் இணைந்து முன்னெடுப்பு

கொழும்பு, மே 09

நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மோதல்களை தடுப்பதில் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் அவர்களின் தலைமைத்துவத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஜப்பான் அரசாங்கமும் ஐ. நா. பெண்கள் அமைப்பும் "சமாதானத்துக்கான பாதைகள்" என்ற செயல்திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

2018ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு தனது பங்காளர் நாடாக ஜப்பான் அரசாங்கம் உதவி செய்துவரும் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரவளிப்பதே இந்த செயல்திட்டத்தின் நோக்காகும்.

இந்த செயல்திட்டம் முன்னர் மோதல்கள் பாதித்த பகுதிகளில் உள்ள 500 பெண்கள் தலைமையிலான நுண்கைத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதோடு, நாட்டின் சமூக - பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் இயலாமையுடைய பெண்கள் உட்பட பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு ஆதரவை வழங்கும்.

"இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் ஐ. நா. பெண்கள் அமைப்பின் நீண்டகால பங்காளராக ஜப்பான் இருந்து வருகிறது. எமது நிகழ்ச்சித் திட்டங்கள் பெண்களின் வாழ்வில் அர்த்தமுள்ள மாற்றத்துக்கு வழிவகுத்துள்ளதுடன், இலங்கைப் பெண்களை மாற்றத்தின் தலைவர்களாக ஆக்குவதற்கு இந்த கூட்டுறவைத் தொடர நாங்கள் எதிர்பார்க்கின்றோம்" என ஐ.நா பெண்கள் அமைப்பின் இலங்கையின் அலுவலகத் தலைவரான ராமயா சல்காடோ தெரிவித்தார்.

இந்த செயல்திட்டம் மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அநுராதபுரம் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ஐ)

## எரிவாயு கொண்டுவந்த லொறி விபத்தில் சிக்கியது

கொழும்பு, மே 09

எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று கால்வாயில் விழுந்து விபத்துக்கு உள்ளானது.

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் வரக்காபொல பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கண்டியிலிருந்து கொழும்புக்கு எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லொறியே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.

விபத்தில், லொறியின் சாரதியும் உதவியாளரும் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வராக்காப்பொல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## லஞ்சம், ஊழல் பற்றிய பணிப்பாளருக்கு எதிராக உயர்நீதிமன்றில் மேன்முறையீடு

கொழும்பு, மே 09

லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனத்தை எதிர்த்து ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் சிறீ லங்கா உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது.

லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக கனிஷ்க விஜயரத்ன நியமிக்கப்பட்டமை ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் விதிகளை மீறும் செயல் என அடிப்படை உரிமைகள் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நியமனம் தன்னிச்சையானது என்றும், நடைமுறை உத்தரவுக்கு எதிரானது என்றும் மேன்முறையீட்டு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தை நீதிமன்றம் செல்லுபடியற்றது என அறிவிக்க வேண்டும் எனவும் விஜயரத்னவை பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து நீக்கி, விசாரணை முடியும் வரை அவருக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## அதிகம் உறங்கும் நாடுகள் இலங்கைக்கு மூன்றாமிடம்!

கொழும்பு, மே 08

உலகில் அதிகநேரம் உறங்கும் நாடுகள் தரவரிசையில் இலங்கை 3ஆம் இடத்தைப் பிடித்துள்ளது. இலங்கையர்கள் சராசரியாக இரவில் 8.1 மணி நேரம் உறங்குகின்றனர்.

60 நாடுகளில் வாழும் மக்களின் சராசரி தூக்கத்தின் அளவை அடிப்படையாக வைத்து பிரிட்டன் நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்விலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் பட்டியலில், பல்கேரியா, அங்கோலா, இலங்கை ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.

## சிறுத்தையின் உடல் மீட்பு!

நுவரெலியா, மே 09

காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுத்தையின் சடலம் நேற்று புதன்கிழமை ஹற்றன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேயிலைத் தோட்டத்தின் மேல் பகுதியிலுள்ள வனப் பகுதியில் இந்த சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது .

சிறுத்தையின் வயிற்றிலும் முதுகிலும் பெரிய காயம் ஏற்பட்டுள்ளதாகவும் இரு சிறுத்தைகள் சண்டையிட்டதன் காரணமாக இந்த சிறுத்தை உயிரிழந்திருக்கலாம் என நல்லதண்ணி வனஜீவராசிகள் பணிமனை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# பேருவளை குப்பைமேட்டால் 450 குடும்பங்கள் பாதிப்பு

### மரிக்கார் எம். பி தெரிவிப்பு

கொழும்பு, மே 09

பேருவளை மாநகர சபை மத்தவிராஜ தோட்டத்தில் பல வருடங்களாக குப்பைகளை கொட்டி வருகின்றது. இதனால், அங்கு மிகப்பெரிய குப்பை மேடு உருவாகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் குப்பை மேட்டால் அந்தப் பகுதியிலுள்ள 450 குடும்பங்கள் பாதிப்புகளை சந்தித்து வருகின்றன என்றும் அவர் வெளிப்படுத்தினார்.

இந்த குப்பை மேட்டால் மீதொட்டமுல்லையில் நடந்ததை போன்று உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். குறைந்த வருமானம் கொண்ட மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே இந்தக் கழிவுகள் கொட்டப்படுகின்றன.

பேருவளை, களுத்துறை பிரதேச செயலகப் பிரிவுகளின் சுகாதாரத் துறையின் பொறுப்பு மாகாண சபைக்கு இல்லை. அது நேரடியாக மத்திய அரசாங்கத்திற்கே உள்ளது.

பேருவளை குப்பை மேட்டை அகற்றி, கழிவுகளை அகற்றுவதற்கு நிலையான தீர்வை வழங்க சுகாதார, சுற்றாடல், உள்ளூராட்சி அமைப்புகள் உட்பட அனைத்து தரப்பினரையும் அழைக்க வேண்டும் - என்றார். (ஐ)

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, மே 09

வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாலத்துடன் மோதிய மோட்டார்சைக்கிள் மோதியதில் 19 வயது இளைஞர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

குருநாகல் - பொத்துஹெர பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் இருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில், ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குருநாகல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு. காவும், த. தே. கூட்டமைப்பும் சேர்ந்தே மாகாண சபை தேர்தலை பிற்போட்டன!

## ஆளுநர் நஸீர் அஹமட் சாடல்

கொழும்பு, மே 09

மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கூடாது, தேர்தலை பிற்போட வேண்டும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து தேர்தலை பிற்போடுமாறு வாக்களித்துவிட்டு இன்று மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருவது வேடிக்கையாக உள்ளது - என்று வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட் தெரிவித்தார்.



வடமேல் மாகாண நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடமேல் மாகாணத்தில் சுற்றுலாத்துறை மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. அதனை மேம்படுத்தவும் வடமேல் மாகாணத்தில் புதிய முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் சுற்றுலா துறையை மேம்படுத்த தாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

எதிர்காலத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதெனிய போன்ற பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படும். நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சி அடைந்த போது அதனை தூக்கி நிறுத்திய ஒரே ஒரு தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே.

மாகாண சபைத் தேர்தலை நடத்தவிடாமல் அதனை பிற்போடுவதற்கு (2017.10.20) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து வாக்களித்து பெரும்பான்மையை ஏற்படுத்தி, தடுத்தன. அன்று மாகாண சபைத் தேர்தலை பிற்போடாமல் இருந்திருந்தால் நான் முதலமைச்சராக இருந்த கால கட்டத்தில் கிழக்கின் அபிவிருத்திக்காக முதலீட்டாளர்கள் கொண்டு வந்த 5 பில்லியன் டொலரை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பேன் - என்றார். (ஐ)



# ஒலுவில் பிரதேச மக்களிடம் பொதுக் கிணறு கையளிப்பு

அக்கரைப்பற்று, மே 09

ஒலுவிலில் சில பகுதிகளில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வாக பொதுக் கிணறு ஒன்றை அமைத்து கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் மக்களிடம் கையளித்துள்ளது.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வை. டபிள்யூ. எம். ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்பு செயலாளரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் மிகவும் குறுகிய நாட்களுக்குள் பொதுக்கிணறுகளை நிர்மாணித்து குறித்த பயனாளிகள் பாவனைக்காக திறந்து கையளித்து வைத்தார்.

இதன்போது பயனாளிகள், ஒலுவில் பிரதேசவாசிகள் கலந்து கொண்டனர். (ஐ)



# கலைமகள் ம. வியில் ஓ. எல். தின விழா!

காரைதீவு, மே 09

சம்மாந்துறை - வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலய கலைத்துளிர்கள் ஓ. எல் தின விழா, அதன் அதிபர் கே. தியாகராஜா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வருடம் கபொத சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டு வழி அனுப்பப்பட்டார்கள்.

அங்கு "கலைத்துளிர்கள்" என்ற சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. விழாவில் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# மூதூரில் இலவச மருத்துவ முகாம்!

மூதூர், மே 09

மூதூர் பிரதேச செயலகம் மற்றும் மூதூர் சமுர்த்தி பிரதேச அமைப்பும் இணைந்து இலவச மருத்துவ முகாம் நேற்று புதன் கிழமை மூதூர் பிரதேச செயலாளர் எம். பி. எம். முபாறக் தலைமையில் மூதூர் கலாசார மண்டபத்தில் நடத்தின.

மூதூர் தள மருத்துவமனையின் மருத்துவர் என். நிப்ராஸ் மற்றும் தாதி உத்தியோகத்தர்களும் இதில் பங்கேற்றனர்.

இதன்போது நீரிழிவு, இரத்த அழுத்தம், தொற்றா நோய்கள், கொலஸ்ட்ரோலுக்கான இரத்த பரிசோதனைகளும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், மூதூர் பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை முகாமையாளர், கிராம நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரச அலுவலகங்களில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஐ)

# தொழுநோய் விழிப்புணர்வு கல்முனையில் நடைபெற்றது

கல்முனை, மே 09

கல்முனை பிராந்தியத்தில் தொழு நோயினால் பாதிக்கப்பட்டு இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு முறையாக சிகிச்சையளிப்பதற்கும் மருத்துவ சிகிச்சை வழங்கும் பொருட்டும் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கள உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல். பிர்தௌஸியாவின் ஒருங்கிணைப்பில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனிபாவின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



இந் நிகழ்வில் பிரதம வளவாளராக கல்முனை பிராந்திய தொற்றுநோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ. சீ.எம்.பசால் கலந்து கொண்டு தொழுநோய் சம்பந்தமாக விளக்கமளித்தார். (ஐ)

# அம்பாறை கடற்கரை பிரதேசத்தில் பிளாஸ்ரிக்கை அகற்ற கோரிக்கை

காரைதீவு, மே 09

அம்பாறையில் காரைதீவு, மளிகைக்காடு பகுதிகளில், கரையோரமாகக் காணப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றி கரையோர சூழலை பாதுகாக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைதீவு, மளிகைக்காடு பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அடை மழை பெய்த நிலையில், வெள்ள நீர், கடலோடு கலப்பதற்காக கால்வாய்கள் வெட்டப்பட்டன.

வெள்ளத்தோடு அடித்து வரப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள், கரையோரப் பகுதிகளில் நிறைந்து காணப்படுகின்றன. இதனால், மக்களும் மீனவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# திருமலையில் கனமழை!

திருகோணமலை, மே 09

திருகோணமலையில் நீண்ட நாட்களின் பின்னர் நேற்று கன மழை பெய்தது.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், தோப்பூர், சம்பூர், கிளிவெட்டி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று காலை முதல் கன மழை பெய்தது.

நீண்ட நாட்களாக திருகோணமலை மாவட்டத்தில் கடும் வெப்பம் நிலவி வந்த நிலையில் கனமழை பெய்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேசிலில் பேரழிவு 90 பேர் உயிரிழப்பு!

## 360 பேர் காயம், 130 பேர் மாயம்
## 2 இலட்சம் பேர் இடப்பெயர்வு

பிரேசிலியா, மே 09

**பிரேசிலில் கடும் மழை, வெள்ளப்பெருக்கில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்தது. மேலும் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் 132 பேர் மாயமாகினர். 361 பேர் படுகாயமடைந்தனர். பலத்த காற்று வீசியதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது இதனால் 4 இலட்சம் பேர் இருளில் மூழ்கினர்.**




பிரேசிலின் ரியோ கிராண்டோ டோ சுல் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. மேலும் பலத்த காற்று வீசியதால் மின்கம்பங்கள் மற்றும் மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் 4 இலட்சம் பேர் இருளில் மூழ்கித் தவிக்கின்றனர். வெள்ளப்பெருக்கில் சிக்கி ஏற்கனவே 85 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மேலும் ஐவரின் உடலை மீட்புப் படையினர் மீட்டனர். இதன்மூலம் அங்கு வெள்ளப்பெருக்கில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை தற்போது 90 ஆக அதிகரித்துள்ளது. உருகுவே மற்றும் ஆர்ஜென்டினாவின் எல்லையிலுள்ள மாகாணத்தில் பதிவான மழைப்பொழிவு, வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் 132 பேர் மாயமாகினர். அவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதனால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கக்கூடும் என அதிகாரிகள் கூறினர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் 361 பேர் படுகாயமடைந்தனர். மேலும் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (எ)

# கோவிட் தடுப்பூசியை திரும்பப்பெற அஸ்ட்ராஷெனெகா நிறுவனம் முடிவு




லண்டன், மே 09

உலக சந்தையிலிருந்து கோவிட் தடுப்பூசியை திரும்பப் பெறுவதாக பிரிட்டனைச் சேர்ந்த மருந்து தயாரிப்பு நிறுவனமான அஸ்ட்ராஷெனெகா நிறுவனம் அறிவித்துள்ளது. வர்த்தக ரீதியான காரணங்களால் கோவிட் தடுப்பூசியை திரும்பப் பெறுவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கோவிட் பெருந்தொற்று நெருக்கடியின்போது அஸ்ட்ராஷெனெகா மற்றும் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகம் இணைந்து கோவிட் - 19 பாதிப்புக்கு தடுப்பூசியை உருவாக்கின.

இந்தியாவில் இந்த தடுப்பூசியை சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவனம் தயாரித்து கொரோனாவுக்கான தடுப்பூசியாக 'கோவிஷீல்ட்' என்ற பெயரில் விற்பனை செய்தது. இதன் மூலம் உலக நாடுகளைச் சேர்ந்த பல கோடி மக்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

இந்தச் சூழலில் அஸ்ட்ராஷெனெகாவின் தடுப்பூசியை செலுத்திக் கொண்ட சிலருக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டதாக குற்றஞ்சாட்டி பிரிட்டன் நீதிமன்றத்தில் 50 இற்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகள் அங்கு தற்போது விசாரணையில் உள்ளன.

இது தொடர்பான வழக்கில் பதிலளித்த அஸ்ட்ராஷெனெகா நிறுவனம் கோவிஷீல்ட் தடுப்பூசி மிக அரிதான சந்தர்ப்பங்களில் பக்க விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தது. இது குறித்த தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலையில் தான் தடுப்பூசியை சர்வதேச சந்தையிலிருந்து திரும்பப் பெறுவதாக அஸ்ட்ராஷெனெகா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் இனி அந்நிறுவனம் கோவிட் தடுப்பூசியை தயாரிப்பதையும் விநியோகம் செய்வதையும் நிறுத்திக் கொள்கிறது. இதனை பிரிட்டன் செய்தி நிறுவனங்கள் உறுதி செய்துள்ளன. இந்த முடிவு முற்றிலும் தற்செயலானது என்ற விளக்கமும் தரப்பட்டுள்ளது.

வர்த்தக ரீதியிலான காரணங்களுக்காக இந்த முடிவை அந்நிறுவனம் எடுத்துள்ளது. கடந்த மார்ச் மாதம் தடுப்பூசியை திரும்பப் பெறுவது தொடர்பான விண்ணப்பத்தை ஐரோப்பிய ஆணையத்தின் வசம் அஸ்ட்ராஷெனெகா சமர்ப்பித்துள்ளது. இது மே 7 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. (எ)



# ரபா மருத்துவமனையிலிருந்து தப்பியோடும் மருத்துவர்கள்!

## 200 நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து

ரபா, மே 09

ரபாவின் பிரதான மருத்துவமனையிலிருந்து மருத்துவர்களும் நோயாளிகளும் தப்பியோடுகின்றனர் என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

அச்சம் காரணமாகவே நோயாளிகளும் மருத்துவர்களும் தப்பியோடுகின்றனர். நோயாளிகளை ரபா எல்லை ஊடாக எகிப்துக்கு கொண்டு செல்லும் நடவடிக்கை இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையால் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

மோதல் பகுதி என இஸ்ரேல் அறிவித்துள்ள காஸாவின் தென்பகுதியில் அபுயூசுவ் அல் - நஜார் மருத்துவமனை உள்ளது.

இந்த மருத்துவமனை தற்போது முற்றாக இயங்க முடியாத நிலையில் காணப்படுகிறது.

இஸ்ரேல் இந்த மருத்துவமனையை மோதல் களத்தின் மையத்துக்குள் சிக்க வைத்துள்ளதால் அந்த மருத்துவமனை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் காரணமாக நோயாளிகளும் மருத்துவர்களும் வெளியேறுகின்றனர் என மருத்துவர் மர்வான் அல் - ஹம்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவமனை மூடப்பட்டால் சிறுநீரக நோயாளிகள் 200 பேரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் பேச்சாளர் மார்க்கிரட் ஹரிஸ் எச்சரித்துள்ளார்.

சிறுநீரகம் செயலிழந்துள்ளதால் பாதிக்கப்பட்டவர்களை இந்த மருத்துவமனையே உயிருடன் வைத்திருக்கின்றது. இந்த மருத்துவமனை செயலிழந்தால் அவர்கள் உயிரிழக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதியாக 5ஆவது முறை புடின் பதவியேற்பு



மொஸ்கோ, மே 09

தேர்தலில் வெற்றி பெற்று ரஷ்யாவின் ஜனாதிபதியாக 5 ஆவது முறை விளாடிமிர் புடின் பதவியேற்றுக் கொண்டார்.

கிரெம்ளின் ஆதரவு வேட்பாளர்கள் மூவர் மட்டுமே புடினுக்கு எதிராகப் போட்டியிட அனுமதி கிடைத்தது. அவர்களும், உக்ரைன் மீது புடின் அரசாங்கம் நடத்தி வரும் போருக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கவில்லை. இதனால் புடினின் வெற்றி உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் 87. 29 சதவீத வாக்குகள் பெற்று புடின் மீண்டும் வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணைக்குழு கடந்த மார்ச் 18 ஆம் திகதி அதிகாரபூர்வமாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து புடினின் பதவியேற்பு விழா நேற்று முன்தினம் நடந்தது. இதன்படி ரஷ்யாவின் ஜனாதிபதியாக 5 ஆவது முறை புடின் பதவியேற்றுக் கொண்டார். ரஷ்யாவில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# உக்ரைன் ஜனாதிபதியை கொலை செய்வதற்கு சதி

## உயரதிகாரிகள் கைது

கீவ், மே 09

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளைப் படுகொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டப்பட்ட நிலையில் அதனை முறியடித்து விட்டோம் என்று துகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ரஷ்யா படையெடுத்தது. உக்ரைனின் கீவ், கார்கிவ், ஒடிசா, மரியபோல் மற்றும் டோனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை போர் தொடக்கத்தில் ரஷ்யா கைப்பற்றியது. ஆனால், அந்த நகரங்களை உக்ரைன் மீண்டும் தன்வசப்படுத்திக் கொண்டது.

இந்நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை படுகொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டிய உக்ரைனின் 2 பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

உக்ரைன் அரசின் பாதுகாப்புப் பிரிவில் அங்கம் வகிக்கும் கேர்ணல்கள் இருவர் பணம் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக, உக்ரைனுக்கு எதிரான இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டனர். இருவரில் ஒருவர்மீது பயங்கரவாதச் செயலுக்குத் தயாரான குற்றச்சாட்டும் உள்ளது. இந்த நிலையில் குறித்த இருவர் மீதும் தேசத்துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் ரஷ்ய பாதுகாப்புப் பிரிவிடம் இருந்து 2 ஆளில்லா விமானங்களையும் மற்றும் வெடிபொருட்களையும் பெற்றுள்ளார். அவற்றை மற்றொரு கூட்டாளிக்கு கொடுத்து, குண்டுவெடிப்பு தாக்குதலை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என உக்ரைன் உயர் அதிகாரிகள் தெரிவித்த னர்.

ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளை படுகொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டப்பட்ட நிலையில் அதனை முறியடித்து விட்டோம் என்று உக்ரைனின் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு ஓகஸ்டில், உக்ரைன் தென்பகுதியான மிகோலைவ் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், ஜெலன்ஸ்கியுடன் தொடர்புடைய உளவுத் தகவல்களை ரஷ்யாவுக்கு அனுப்ப முயன்றபோது கைது செய்யப்பட்டார். கடந்த ஏப்ரலில் போலந்து நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் ஜெலன்ஸ்கியை கொலை செய்வதற்கான சதித் திட்டத்துக்கு உதவியது தெரியவந்தது.

இவை தவிர, ரஷ்யா நடத்திய குண்டுத் தாக்குதலின் போது, பல முறை சிக்கக் கூடிய அனுபவங்களை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி எதிர்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 20 வருடங்கள் கடூழிய சிறை

## 13 ஆண்டுகளின் பின்னர் தீர்ப்பு

கொழும்பு, மே 09

**12 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றவாளிக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்தது கொழும்பு - பலப்பிட்டி நீதிமன்றம்.**

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறும், 25 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உரகஸ்மன்ஹந்தி பிரதேசத்தை சேர்ந்த நபரொருவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கடந்த 2011ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட 12 வயது சிறுமியின் தாய் வெளிநாட்டில் உள்ளார். சிறுமி தனது தந்தையின் பராமரிப்பில் வாழ்ந்துள்ளார். இந்நிலையில், சிறுமியின் தந்தையின் நண்பர் தந்தை இல்லாதபோது சிறுமியை மிரட்டி பலமுறை வன்புணர்ந்துள்ளார்.

இது தொடர்பில் தந்தைக்கு தெரிய வந்ததையடுத்து சந்தேக நபருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. 13 ஆண்டுகால வழக்கு விசாரணை முடிவில் குற்றவாளிக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஓ. எல். பரீட்சை நிறைவடைந்த இரு வாரத்தில் உயர்தரம் ஆரம்பம்!



கொழும்பு, மே 09

தற்போது நடைபெற்றுவரும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்த 2 வாரங்களுக்குள் அவர்களுக்கான உயர்தர கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட கல்விச் செயல்பாடுகளின் [illegible]வை சீர்செய்யும் [illegible]த திட்டம் செய[illegible]வுள்ளது என்[illegible]சர் கூறினார்.

[illegible]னை க. பொ. த. [illegible] தரப் பரீட்சை நிறை[illegible]தும் விடைத்தாள் [illegible]பீட்டு பணிகளை 2 நிலைகளின் கீழ் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதற்காக 35 ஆயிரம் ஆசிரியர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கண்டியில் டெங்கு நோய் பரவக்கூடிய அபாயநிலை!

கண்டி, மே 09

நுளம்பு குடம்பிகள் பற்றிய ஆய்வுகளின் பிரகாரம் அடுத்த மாதமளவில் கண்டி மாவட்டத்தில் டெங்கு ஆட்கொல்லி நோய் அதிகமாக பரவக்கூடும் என்று மருத்துவ உத்தியோகத்தர்கள் எச்சரித்துள்ளார்கள்.

இந்த நிலைமை பற்றி உள்ளூராட்சி நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும் என கண்டி மாவட்ட சமூக நோய்கள் சிறப்பு நிபுணர் மருத்துவர் கிருஷாந்த மாசாச்சி தெரிவித்தார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகிறது. இந்த வருடத்தில் டெங்கு நோயால் ஒன்பது பேர் உயிரிழந்தனர். கண்டி மாவட்டத்தில் இதுவரை எந்தவொரு மரணமும் பதிவாகவில்லை.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் தரவுகளின்படி, இந்த வருடம் ஏப்ரல் மாத இறுதிக்குள் 1,547 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏப்ரல் மாதத்தில் 232 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏப்ரல் இறுதி வாரத்தில் 72 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இவர்களில் 15 பேர் கண்டி மாநகர சபையில் வசிப்பவர்கள் - என்றார்.

கண்டி மாநகர சுகாதார வைத்திய பிரிவு தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவால் நியமிக்கப்பட்ட 4 டெங்கு அபாய வலயங்களுக்கு உட்பட்டது என்றும் கூறினார். (ஐ)

# சிறுநீரக நோயாளர் எண்ணிக்கை 3 ஆயிரத்தால் வருடாந்தம் உயர்வு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மே 09

ஒவ்வோர் ஆண்டும் நாட்டில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்தால் அதிகரிக்கிறது என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் சுகாதார அமைச்சு நாடு முழுவதும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் 30 ஆயிரத்து 657 ஆக காணப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை, 2023 ஆம் ஆண்டில் 72 ஆயிரத்து 546 ஆக உயர்வடைந்துள்ளது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுயந்த கருணாதிலக பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியிருந்தார். அவருக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# குமார வெல்கமவுக்கு 3 மாதங்கள் விடுப்பு!

கொழும்பு, மே 09

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கு மூன்று மாத விடுமுறை வழங்குவதற்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வெல்கமவுக்கு மூன்று மாத விடுமுறை வழங்கப்பட வேண்டுமென முன்மொழிந்தார்.

இந்நிலையில் குமார வெல்கம சுகயீன நிலையில் உள்ளார் என்றும் அதனால் அவருக்கு இந்த விடுமுறை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிப்பாயுடன் சேர்ந்து போதைப்பொருள் விநியோகித்து வந்த பெண் கைது!

கொழும்பு, மே 09

கடற்படை சிப்பாயுடன் இணைந்து அநுராதபுரத்தில் போதைப்பொருளை விநியோகித்தார் என்று சந்தேகிக்கப்படும் பெண்ணை கைது செய்துள்ளார்.

பெண் கைது செய்யப்பட்டபோது, அவரிடமிருந்து ஒரு தொகை போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் பெறுமதி ஒரு கோடி ரூபாய் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

36 வயது பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார். பூசா சிறையிலுள்ள போதைப்பொருள் கடத்தல்கார் ஒருவரின் பின்னணியிலேயே இந்தப் போதைப்பொருளை பெண் விநியோகித்து வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

குறித்த பெண் கடற்படை சிப்பாய் ஒருவருடன் இணைந்தே போதைப் பொருள் விநியோகத்தை மேற்கொண்டு வந்துள்ளார் என்று விசாரணையில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# யூ-ரியூப், கூகுளுக்கு எதிராக இராணுவத் தளபதி வழக்கு!

கொழும்பு, மே 09

சமூக ஊடகங்களில் காணொலிகளை வெளியிட்டு தம்மை அவமானப்படுத்துவதை நிறுத்துமாறு கோரி இராணுவ தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தனிப்பட்ட வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார்.

2024 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நிகழ்நிலை காப்பு சட்டத்தின் பாதுகாப்பு தொடர்பான சட்டத்தின் பிரிவு 24 இன்படி இந்த வழக்கை அவர் தாக்கல் செய்துள்ளார்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே வாதியாகவும் இந்த தனிப்பட்ட வழக்கின் பிரதிவாதிகளான துஷார சாலிய ரணவக்க என்ற மிற்செல் ரணவக்க மற்றும் இணைய யூ -ரியூப் மற்றும் கூகுள் நிறுவனம் பிரதிவாதிகளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான தனிப்பட்ட வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே முன்னிலையில் பரிசீலிக்கப்படவுள்ளது. (ஐ)

# பன்றி இறைச்சி உண்ட கைதிகள் இருவர் மரணம்!

கொழும்பு, மே 09

வீட்டிலிருந்து கொடுக்கப்பட்ட பன்றி இறைச்சி உணவை உட்கொண்ட கைதிகள் இருவர் உயிரிழந்தனர். கொழும்பு மகசின் சிறையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்து வந்த உணவுப் பொதியை கைதி ஒருவர் சக கைதிகளான 15 பேருடன் பகிர்ந்து உட்கொண்டார். இதில், மூவர் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்தனர்.

பொரளை மற்றும் தெஹிவளை பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

உணவு ஒவ்வாமை காரணமாக இந்த மரணங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்த உணவை உட்கொண்ட ஏனைய 13 பேருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

# சகல பேருந்து சேவைகளும் பண்டாரவளையில் நிறுத்தம்

கொழும்பு, மே 09

இ. போ. ச., தனியார் பேருந்து சேவையினரிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து பண்டாரவளையில் சகல பேருந்து சேவைகளும் நேற்று நிறுத்தப்பட்டன.

பண்டாரவளை இ. போ. ச. பேருந்து சேவையினர் தனியார் பேருந்து சேவையினர் இடையே நேற்று புதன்கிழமை மோதல் ஏற்பட்டது. இதில் இரு தரப்பையும் சேர்ந்த நால்வர் காயமடைந்து பண்டாரவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து நேற்று முதல் இரு தரப்பினரும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பேருந்து சேவை வழங்குநர்களை மீண்டும் பணியில் ஈடுபடுத்த பேச்சுகள் நடைபெற்றபோதிலும் நேற்று மாலை வரை தீர்வு எட்டப்படவில்லை. (ஐ)

# நீச்சல் தடாகத்தில் விழுந்தவர் மரணம்!

கொழும்பு, மே 09

ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் விழுந்து ஊழியர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கேகாலை - ரம்புக்கனை - கொடிகமுவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டலிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், 37 வயதுடைய பன்வில பகுதியை சேர்ந்த நபரே உயிரிழந்தார்.

மேலதிக விசாரணைகளை ரம்புக்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டயானாவின்...

வகிக்க தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப் பட்டபோது முஜிபுர் ரஹ்மான் கொழும்பு மாநகரசபையின் மேயர் வேட்பாளராக போட்டியிடும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்.

எனினும் முஜிபுர் ரஹ்மானை தேசியப் பட்டியலின் ஊடாக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் அதிகாரபூர்வ அறிவிப்பு இதுவரை வெளியிடப்படவில்லை. (அ)

## போதை...

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் பங்கேற்புடன் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை விடுவிப்பதற்காக கொழும்பில் மட்டும் 11 புனர்வாழ்வு நிலையங்கள் நிறுவப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## 17பில்லியன்

அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர முடியும் - என்றும் அவர் கூறினார்.

நேற்று புதன்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவற்றைத் தெரிவிததார்.

மேலும், இலங்கை அணிசேரா வெளிநாட்டு கொள்கையை பின்பற்றி அனைத்து நாடுகளுடனும் உறவுகளைப் பேணி இறையாண்மையை பாதுகாத்து வருகிறது. இதனால், இலங்கைக்கு பல சலுகைகள் கிடைத்து வருகின்றன.

சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் ஆகியவை கடன் மறுசீரமைப்புக்கு பெரும் ஆதரவை வழங்கின. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை பெற்ற பின்னர் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர முடியும்.

சீனாவுடனும் இந்தியாவுடனும் எமக்கு நெருங்கிய உறவை ஏற்படுத்த முடிந்துள்ளது. சீனாவுடன் 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்தியாவை சேர்ந்த முதலீட்டாளர்கள் இலங்கையில் அதிகளவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுகிறார்கள். குறிப்பாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியில் முதலீடு செய்ய அதானி நிறுவனம் முன்வந்துள்ளது. இலங்கையில் முதலீடுகள் செய்வது குறித்து சவுதி அரேபியாவும் கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் தங்களது எரிபொருள் சார்ந்த பொருளாதாரத்தை தாண்டி ஏனைய நாடுகளில் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி தங்கள் நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றன. அதனை இலங்கைக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

இலங்கையை சுற்றுலா மையமாக மாற்ற வேண்டுமாயின் வீசா கட்டணத்தில் கவனம் செலுத்தாமல் சுமார் ஐம்பது நாடுகளுக்கு இலவச வீசா வழங்க வேண்டும். இதன் ஊடாக சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்கலாம்.

தற்போது மியான்மாரில் உள்ள இளைஞர்களைக் காப்பாற்ற இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சட்டபூர்வமற்ற முறையில் ரஷ்யா - உக்ரைன் யுத்தம் சார்ந்த கூலிப்படைக்கு அனுப்பப்பட்டுள்ள நமது இளைஞர்களை காப்பாற்ற இராஜதந்திர ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரஷ்யாவின் படையினருடனும் இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது" - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## கூலிப்படைகளாக...

உக்ரைன் - ரஷ்யப் போரில் இலங்கை இரா ணுவத்தின் முன்னாள் வீரர்கள் கூலிப் படைக ளாக இணைந்து செயற்படுவதாக அண்மையில் தகவல்கள் வெளியாகி யிருந்தன.

அத்துடன், இந்தப் போரில் இலங்கையர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக சம்பளம், குடியுரிமை உள்ளிட்ட போலி வாக்குறுதிகளால் அழைத்துச் செல்லப்படும் இவர்கள் அங்கு கூலிப்படையாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, சவேந்திர சில்வா இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில்-

ஒரு காலத்தில் எம் தேசத்தின் பெருமையாக இருந்த இந்த படை வீரர்கள் இன்று போலியான வாக்குறுதிகளுக்கு அடிபணிந்துள்ளனர். போர் வீரர்கள் மற்றும் தேசபக்தர்கள் என்று வரையறுக்கும் விழுமியங்களையும் கைவிட்டுள்ளனர்.

இலங்கையின் ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் என்ற வகையில், கடமை, மரியாதை மற்றும் தாய்நாட்டிற்கான விசுவாச உணர்வு ஆகியவற்றால் நாங்கள் கட்டுப்பட்டுள்ளோம்.

ஆனால் இன்று பணம் மற்றும் நிலையற்ற பெருமைக்காக தங்களின் விசுவாசத்தை கைவிடும்படி தூண்டப்படுகின்றனர். கூலிப்படை என்பது உன்னதமாக போர் நடவடிக்கை அல்ல. மாறாக இது ஆபத்தான பாதையாகும்.

இந்தப் பாதையில் நடப்பவர்கள் மூலம் எமது மதிப்பிற்குரிய இராணுவத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் அபாயம் உள்ளது.

உலகின் மிகவும் பயங்கரவாத அமைப்பை தோற்கடித்த இராணுவத்தின் உறுப்பினர்களாக, நாம் எமது தொழிலின் மரியாதையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்த வேண்டும்- என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## திருமலை...

பிக்கு ஒருவரினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் சப்த நாக விகாரையாக மாற்றப்பட்டு திரியாய் மக்களின் வழிபாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆலயத்தில் திரியாய் மக்கள் பரம்பரை பரம்பரையாக குலதெய்வ வழிபாட்டில் ஈடுபட்டு வந்ததாகவும், 1984 ஆம் ஆண்டு இடம்பெயர்வில் சென்று மீண்டும் 2002 ஆம் ஆண்டு வந்து வழிபாட்டில் ஈடுபட்டு வந்த நிலையில் 2021 ஆண்டளவில் பிக்கு ஒருவரினால் தமிழ் மக்களின் வழிபாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதியில் புதையல் தோண்டியுள்ளதாகவும் திரியாய் மக்கள் கூறுகின்றனர்.

விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை தமது வாழ்வாதார தொழிலாக கொண்டுவரும் திரியாய் மக்கள் நெல் விதைப்பின்போதும், அறுவடையின்போதும் வளத்தாமலையடி நாக தம்பிரானுக்கு நேர்த்தி வைத்து பொங்கிப் படைத்த பின்னரே தமது தொழிலைத் தொடங்குவதாகவும், புல்மோட்டையைச் சேர்ந்த இஸ்லாமிய சகோதரர்கள்கூட நம்பிக்கை வைத்து நேர்த்தி வைத்து வந்ததாகவும் திரியாய் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது குறித்த ஆலயத்தை வழிபட முடியாமலும் நேர்த்திக்கடன்களை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளமையினாலும் ஆலயத்தில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள புல்மோட்டை பிரதான வீதியில் நின்று ஆலயத்தை பார்த்து கற்பூரம் ஏற்றி வழிபட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே வளத்தாமலையானை வழிபடுவதற்கு அனுமதி வழங்குமாறு திரியாய் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ)

# கொழும்பில் துப்பாக்கி சூடு; ஒருவர் பலி!

கொழும்பு, மே 09

கொழும்பில் நேற்றிரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

பலப்பிட்டி - அஹூங்கல்ல - போகஹபிட்டி பிரதேசத்தில் இந்த துப்பாக்கிச் சூட்டில் 54 வயது நபரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் தனது வீட்டில் இருந்தபோதே சுடப்பட்டார். துப்பாக்கிசூட்டுக்கான காரணம் தெரியவரவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சிறீலங்கன்...

கோடி ரூபாய்க்கு மேல், 2015-2016 இல் 13 ஆயிரத்து 84 கோடி ரூபாய்க்கு மேல், 2016-2017இல் 2 ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கு மேல், 2017-2018இல் 417 கோடி ரூபாய்க்கு மேல், 2018-2019 இல் 4 ஆயிரத்து 413 கோடி ரூபாய்க்கு மேல், 2020 2021இல் 4 ஆயிரத்து 970 கோடி ரூபாய்க்கு மேல், 2021 2022இல் 16 ஆயிரத்து 358 கோடி ரூபாய், 2022 2023ல் 7 ஆயிரத்து 130 கோடி ரூபாய் மற்றும் 2023 2024இல் ஆயிரத்து 247 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், 2021-2022இல் விமான நிறுவனம் மிகப்பெரிய இழப்பை சந்தித்துள்ளது. அந்தக் காலக்கட்டத்தில் ஏற்பட்ட இழப்பு 16 ஆயிரத்து 358 கோடி ரூபாய் என்று தெரிவித்த பிரதமர், சிறீலங்கன் விமான சேவை மற்றும் விமான நிலையத்தை அரசாங்கத்துக்கு வரி செலுத்தும் மக்களுக்கு சுமை இல்லாதவாறு முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

## காலநிலை...

என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடந்த இலங்கை காலநிலை மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இதுவரை சுற்றுச்சூழலில் மட்டுமே எங்கள் கவனம் இருந்தது. ஆனால், அதில் காலநிலை மாற்றம் வகிக்கும் முக்கிய பங்கை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காலநிலை மாற்றம் மோசமானால் முழு சுற்றுச்சூழலும் சீர்குலைந்துவிடும். எனவே, காலநிலை மாற்றத்தை எவ்வாறு மாற்றியமைப்பது மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக எவ்வாறு போராடுவது என்பதில் நாம் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார முறைமையில் எம்மால் முன்னேற முடியாது. நான் முன்பு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டது போல், நாம் அதிக போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அதற்கான புதிய சட்டத்தையும் உருவாக்கி இருக்கிறோம். மேலும் பொருளாதார மாற்ற சட்டம் அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கிறோம்.

2050ஆம் ஆண்டுக்குள் நிகர பூச்சிய உமிழ்வை அடையும் இலக்கை இலங்கை அடைவதையும் இந்த பொருளாதார மாற்ற சட்டம் உறுதி செய்கிறது. மேலும் அந்த காலப்பகுதிக்கு முன்னர் இலங்கை இந்த இலக்கை அடைய முடியும் என்று நான் நம்புகிறேன்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான புதிய சட்டத்தையும் நாங்கள் உருவாக்கி வருகிறோம். சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் இரண்டையும் கையாளும் ஒரு சட்டத்தை கொண்டு வர முடிவு செய்துள்ளோம். இதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தொடர்ந்து செயல்படும் அதேவேளை , காலநிலை மாற்றத் தழுவல் மற்றும் அதில் உள்ளடங்கும் [illegible] என்றார். (ஐ)

## ஐ.பி.எல்...

வியாஸ்காந்த் முதல் இரண்டு ஓவர்களில் வெறும் 7 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்தார். அடுத்த இரு ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்திருந்தார்.

இந்தியாவின் ஹைதராபாத்திலுள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிரான போட்டியே வியாஸ்காந்தின் முதல் ஐ. பி. எல். போட்டியாக அமைந்தது.

இதேநேரம், லக்னோ அணியின் தலைவரான கே. எல். ராகுலுக்கு எதிராக சிறப்பாக பந்து வீசிய வியாஸ்காந்த் மட்டுப் படுத்தப்பட்ட ஓட்டங்களையே விட்டுக் கொடுத்தார். அத்துடன், தான் வீசிய முதல் இரண்டு ஓவர்களில் சிக்ஸர் மற்றும் பௌண்ட்ரிகள் கொடுக்காமல் சன்ரைசர்ஸ் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக ஜொலித்தார்.

எனினும், தனது நான்காவது ஓவரில் ஒரு விக்கெட் வீழ்த்தும் வாய்ப்பை வியாஸ்காந்த் தவறவிட்டிருந்தார். இந்தப் போட்டியில் சிறப்பாக பந்து வீசிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணித் தலைவரான பட் கம்மின்ஸ் மற்றும் டிராவிஸ் ஹெட், த. நடராஜன் ஆகியோரின் பாராட்டையும் வியாஸ்காந்த் பெற்றார் என்பது குறிப் பிடத்தக்கது.

வனிந்து ஹசரங்க காயம் காரணமாக ஐ. பி. எல். போட்டியில் விளையாடாமல் போகவே அவரின் இடத்துக்கு வியாஸ்காந்த் எடுக்கப்பட்டார் என்பது ஏலவே தெரிந்ததே. (ஐ - எ)

## தீப்பந்தம்...

அதிபரது வசிப்பிடமாகிய எலிஸே மாளிகைக்குப் பாண் விநியோகிக்கின்ற பெருமையைப் பெற்றவரான தர்ஷன் செல்வராஜா என்பவரே ஆயிரக்கணக்கானோரில் ஒருவராகப் பாரிஸில் ஒலிம்பிக் தீப்பந்தம் ஏந்துவதற்குத் தெரிவாகியிருக்கிறார்.

இன்று வியாழக்கிழமை மார்செய் நகருக்கு வந்தடைகின்ற தீப்பந்தத்தை பிரான்ஸின் பெருநிலப்பரப்பிலும் கடல் கடந்த நிர்வாகத் தீவுகளிலும் சுமார் 12 ஆயிரம் கிலோமீற்றர்கள் தூரத்துக்கு ஆயிரக்கணக்கானவர்கள் அஞ்சல் ஓட்ட முறையில் மாறிமாறிச் சுமந்து செல்லவுள்ளனர். இந்த நீண்ட பயணத்தில் சுமார் நானூறு நகரங்கள் மற்றும் உல்லாசப்பயண மையங்கள் ஊடாகத் தீப்பந்தம் எடுத்துச்செல்லப்படவுள்ளது.

தங்கள் கரங்களில் ஒலிம்பிக் சுடரைச் சுமந்து ஓடுவதற்காக நகரங்கள் தோறும் பல ஆயிரக்கணக்கானவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

தீப்பந்தம் பாரிஸ் பிராந்தியத்துக்கு பெரும்பாலும் ஜூலை மாத முதல் வாரங்களில் வந்துசேரும். தர்ஷன் செல்வராஜா எந்த இடத்தில் வைத்து அதனை ஏந்துவார் என்ற விவரங்கள் இனிமேல்தான் தெரிய வரும்.

பாரிஸ் நகரின் சிறந்த பாணைத் தெரிவு செய்வதற்காகப் பாரிஸ் நகர சபையால் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்ற போட்டியில் கடந்த ஆண்டு நகரின் 20 ஆவது நிர்வாகப் பிரிவில் அமைந்துள்ள "Au levain des Pyrénées" என்ற தர்ஷன் செல்வராஜாவின் வெதுப்பகம் முதல் இடத்தை வென்று சாதனை படைத்தமை தெரிந்ததே.

தர்சன் செல்வராஜா இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து 2006 ஆம் ஆண்டு பிரான்ஸ் வந்தவர். இத்தாலி உணவகம் ஒன்றில் பணியாற்றியவர்.

அங்கே ஏற்பட்ட ஓர் அறிமுகம் காரணமாகத் தனது உணவகத் தொழிலைக் கைவிட்டுச் சுயமாக வெதுப்பகம் ஒன்றைப் பொறுப்பேற்று நடத்திப் பாண் தயாரிப்பில் இந்தச் சாதனையை நிலைநாட்டியிருந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேர்தலை இலக்காக கொண்டு அவசர அபிவிருத்தியில் அரசு!

**மகிந்த தேசப்பிரிய குற்றச்சாட்டு**

கொழும்பு, மே. 09

**தேர்தலை இலக்காக கொண்டே அரசாங்கம் அவசர அபிவிருத்திகளை மேற்கொண்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தேர்தல் சட்டம் இத்தருணத்தில் அமுலில் தான் இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகிறது.


தேர்தலொன்றுக்கான அழைப்பு விடுக்கப்பட்டு வேட்புமனுக்கள் பெறப்பட்டுவிட்டன. ஆனால், தேர்தல் நடைபெறவில்லை. இதன் காரணமாகவே தேர்தல் சட்டம் நடைமுறையில் இருப்பதாக ஆணைக்குழு கூறுகிறது.

இந்த பின்புலத்தில் எதிர்வரும் ஐந்து மாதங்களில் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெற உள்ளது. இதற்கு இடையில் அரசாங்கம் அவசர அவசரமாக மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளும் நிதி ஒதுக்கீடுகளும் தேர்தலை இலக்காக கொண்டதென கூறப்படுகிறது. எனது நிலைப்பாடும் அதுதான்.

வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கான பணிகளை ஜூலை 30 ஆம் திகதிக்கு முன்னர் முன்னெடுக்குமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மலையகப் பகுதிகளில் இந்தப் பணிகளை துரிதப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் நவம்பர் 30ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

மலையகத்தில் இவ்வாறு அபிவிருத்திப் பணிகளை துரிப்படுத்துமாறு கோருவது நல்ல விடயம். அது முன்னெடுக்கப்பட வேண்டிய விடயம்தான். என்றாலும்,



தேர்தலை இலக்காகக் கொண்டு செய்வது பொறுத்தமற்றது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பகிரப்படும் அரிசியை வழங்க முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் செல்வதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அது அரசியல் நோக்கங்களை இலக்காகக் கொண்டது.

இத்தருணத்தில் அரிசி அல்லது எந்தவொரு நிவாரணம் பகிரப்பட்டாலும் அது மக்களின் வரிப் பணத்தில் வழங்கப்படும் நிவாரணமென அடையாளப்படுத்தப்பட வேண்டும். 2015ஆம் ஆண்டுமுதல் இந்த முறைமைகளை நாம் பின்பற்றினோம்.

உள்ளூராட்சிமன்றங்களுக்கு 10 மில்லியன் வரை நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. அதனை வரவேற்கிறோம்.

அதற்கு பதிலாக குறித்த தேர்தலை நடத்தினால் அதனை இலகுவாக செய்ய முடியும். தற்போது முன்னெடுக்கப்படும் செயல்பாடுகள் ஆளுநரின் கீழ் முன்னெடுக்கப்படும். அவை முற்றிலும் அரசியல் சார்பானது-என்றார்.

## அதிகரிக்கும் வெப்பம்

# இனிப்புப் பானங்களை பருகுவதை தவிர்க்கவும்!

கொழும்பு, மே. 09

தற்போதைய வெப்பமான காலநிலையில் செயற்கை இனிப்பு கலந்த பானங்களை குடிப்பதனால் பாதகமான விளைவுகள் ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

செயற்கை இனிப்பு பானங்களை குடிப்பதால் அதிக தண்ணீர் குடிக்க வேண்டிய தேவை அதிகரிக்கும்.

செயற்கை இனிப்புப் பானங்களில் அதிக அளவு சர்க்கரை இருப்பதே இதற்குக் காரணம். சர்க்கரை அதிகமாக கலந்த பானங்களை குடிப்பதால் வேறு நோய்களுக்கு இலக்காக வேண்டிய நிலையும் ஏற்படும்.

வெப்பமான காலநிலையில் வெளிப்புற நடவடிக்கைகளைக் குறைப்பது மற்றும் வெயிலில் சுற்றித்திரிவது போன்ற விடயங்களை தவிர்ப்பது மிகவும் முக்கியம்.

வெப்பம் உச்சத்தில் இருக்கும் பொழுது, கடினமான செயல்களை முடிந்தவரை தவிர்ப்பது மிகவும் அவசியம். தற்போதைய சூழ்நிலையில், இயற்கை திரவங்களை அதிகம் குடிப்பது மிகவும் அவசியம். அதிகமாக சுத்தமான குடிதண்ணீரை பருகுங்கள்.

குறிப்பாக, குளிர்ந்த நீர், பல்வேறு வகையான பழச்சாறுகள், இளநீர் மற்றும் இயற்கை பானங்கள் அருந்துவது மிகவும் அவசியம்.

நாளொன்றுக்கு இரு தடவைகள் குளிர்ந்த நீரால் உடலை நனைப்பது மிகவும் அவசியம். சிறு குழந்தைகளையும் நாளொன்றுக்கு இரு தடவைகள் குளிக்கச்செய்வதும் சிறந்தது-என்றார். (அ)

# சு.கவுடன் சந்திரிகா இணையவேண்டும்!

**கோருகிறார் தயாசிறி**

கொழும்பு, மே. 09

சுதந்திரக் கட்சிக்குள் பிளவுபட்டுள்ள அணிகள் ஒன்றுபடவேண்டும் எனவும் சந்திரிகா அம்மையாரும் இணையவேண்டும் எனவும் அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனக்கு ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவு இல்லை. எனக்கான தகுதி என்ன என்பது எனக்கு தெளிவாக தெரியும். கட்சியை கட்டியெழுப்புவதே எனது நோக்கம்.

சுதந்திரக்கட்சி என்பது ராஜபக்ச குடும்பத்துக்கோ அல்லது பண்டாரநாயக்க குடும்பத்துக்கோ உரித்தானது அல்ல, அது மக்களின் கட்சி.

எனவே, பல அணிகளாக பிளவுபட்டுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஒன்றுபட வேண்டும். அப்போது தான் கட்சியை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்வதற்கென நடைமுறையொன்று உள்ளது. அந்த விதிமுறைகளை கருத்திற்கொள்ளாமலேயே மைத்திரிபால சிறிசேன தன்னிச்சையாக ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்துள்ளார்-என்றார். (அ)

# தாதியரின் ஓய்வு பெறும் வயதெல்லை அதிகரிப்பு

கொழும்பு, மே. 09

தாதியர்கள் உட்பட சில சுகாதார சேவையாளர்களின் ஓய்வு பெறும் வயதை 61 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

தாதியர் மற்றும் ஏனைய சுகாதார சேவையாளர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டபோதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என காமினி வலேபொட பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக இரத்தினபுரிப் பகுதியிலுள்ள தாதியர் பயிற்சிப் பாடசாலையின் அதிபர் ஓய்வு பெற்று தற்போது வேறு ஒருவரிடமோ அல்லது அடுத்த அதிபரிடமோ கடமைகளை ஒப்படைக்காமல் வைத்தியசாலையில் தங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஓய்வு பெறும் வயதெல்லை 63 என்பது நடைமுறைப்படுத்தப்படுமா இல்லையா என்பது துறைத் தலைவர்களுக்குக் கூடத் தெரியாது எனவும், இதன் காரணமாக பயிற்சிப் பாடசாலையை பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் காமினி வலேபொட குறிப்பிட்டார்.



இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், வயதை 61 ஆக அதிகரிக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், வயதெல்லை 61 இற்கு மேல் நீடிக்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பயங்கரவாத விசாரணைப் பிரிவின் 2 அதிகாரிகள் பணி இடைநிறுத்தம்!

கொழும்பு, மே. 09

கொழும்பு - பன்னிப்பிட்டி, வீர மாவத்தையில் உள்ள வீடொன்றில் வசிப்பவர்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் இருவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் எனக் கூறியே இவர்கள் இவ்வாறு அச்சுறுத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

வீர மாவத்தையில் வசித்து வந்த தம்பதியரை பிரிந்து செல்லுமாறு குறித்த பெண்ணின் தந்தை சில காலம் அழுத்தம் கொடுத்து வந்துள்ளார்.

பெண்ணின் தந்தை பல சந்தர்ப்பங்களில் மகளின் கணவனை மிரட்டி துன்புறுத்தியதால் அவர் டுபாய் சென்றுள்ளார்.

இருப்பினும், டுபாயில் இருந்து நாடு திரும்பியதும் மீண்டும் இருவரும் வீர மாவத்தையில் உள்ள வீடொன்றில் குடியேறியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் என கூறிக்கொண்டு சிலர் வீட்டுக்கு வந்து போதைப்பொருள் விற்பனை செய்ததாக தனது மகன் மீது குற்றம் சுமத்தித் தம்மை அச்சுறுத்தியதாக அந்த நபரின் தாயார் தெரிவித்துள்ளார்.

எனினும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் எனக்கூறி வந்த குழுவினர் தமது மனைவியின் தந்தையின் நண்பர்கள் என குறித்த நபரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி எனக் கூறிக்கொண்டு வந்த நபர் ஒருவர் துறைமுக அதிகார சபையின் ஊழியர் என்பதும் தெரியவந்துள்ளது.

ஏனைய இருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட துறைமுக அதிகாரசபையின் ஊழியர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், பயங்கரவாத விசாரணைப் பிரிவின் இரு அதிகாரிகளிடமும் விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

குறித்த இரண்டு அதிகாரிகளின் சேவையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org